பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 பங்குனி 07 புதன்கிழமை 21.03.2018 கதிர் 136

## ரணில் நரி

### சரவணபவன் ஆவேசம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 21

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அருகில் இருப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கோ, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கோ அருகதை

பக்கம் 17

# கட்சியின் முடிவை மீறினால் ஒழுங்கு நடவடிக்கை பாயும்

## உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு நேற்று கூட்டமைப்பின் தலைவர்கள் எச்சரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 21

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவுக்குக் கட்டுப்படாமல் அதனை மீறிச் செயற்படும் உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்கள் மீது மிகக் கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் நேற்றுப் பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்தனர்.

கூட்டமைப்பின் சார்பில் உள்ளூராட்சிச் சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் நேற்றுப் பதவிப் பிரமாணம் செய்துகொண்ட முதல் நாளிலேயே அவர்களுக்கு இந்தக் கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

பக்கம் 18

## தனியார் வங்கியில் கொள்ளை!

கொழும்பு, மார்ச் 21

தனியார் வங்கியொன்றில் சுமார் 9 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணம் கத்தி முனையில் கொள்ளையிடப்பட்டதாகப் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

பக்கம் 17

## வீரவன்ஸவுக்கு நீதிமன்றம் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 21

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ மற்றும் ஜயந்த சமரவீர ஆகியோருக்கு எச்சரிக்கை விடுத்த கொழும்பு

பக்கம் 17

## கூட்டமைப்பு உறுப்பினர்கள் நேற்றுப் பதவிப் பிரமாணம்






(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் உள்ளூராட்சிச் சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்

பக்கம் 18

## இலங்கைக்கு இன்று ஜெனீவாவில் 'செக்'

ஜெனீவா, மார்ச் 21

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில் இலங்கையின் பொறுப்புக்கூறல் விவகாரம் இன்று விவாதத்துக்கு வருகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படும் விதம்

பக்கம் 17

## இலங்கை விடயத்தில் அமெ. மிக இறுக்கமாவே நிற்கும்

### அந்நாட்டு அதிகாரிகள் சுமந்திரனிடம் உறுதி



நியூயோர்க், மார்ச் 21

ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசு தொடர்ச்சியாகத் தாமதப் போக்கை கொண்டிருப்பதால், இது

பக்கம் 17

## பயங்கரவாதச் சட்டத்தால் தமிழர் பலர் நிர்க்கதிநிலை

### சார்ள்ஸ் எம்.பி. சபையில் விசனம்



கொழும்பு, மார்ச் 21

இலங்கையில் நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் விளைவு கொடூரமானதெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட

பக்கம் 17

## ஐ.நா. அரசியல் செயலருடன் சுமந்திரன் குழுவினர் பேச்சு



நியூயோர்க், மார்ச் 21

அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன், ஐ.நாவின்

பக்கம் 18

## முன்னாள் போராளிகளுக்கும் நட்ட ஈடுகள் வழங்கப்படுமா?

### சபையில் டக்ளஸ் எம்.பி. கேள்வி



கொழும்பு, மார்ச் 21

போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் புனர்வாழ்வு அதிகார சபையினால் வழங்கப்படும் நட்ட ஈடுகளை முன்னாள்போராளிகளும்பெறமுடியுமா என நாடாளு

பக்கம் 04

## இலங்கைப் பூகோள கால மீளாய்வு அறிக்கை ஐ.நாவில் நிறைவேற்றம்

ஜெனீவா, மார்ச் 21

ஐ. நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான பூகோளக் காலக்கிரம மீளாய்வு அறிக்கை நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது.

இலங்கைதொடர்பான பூகோளக் கால மீளாய்வு விவாதம், நேற்று முன்

பக்கம் 04

### இனி அது ரகசியம் அல்ல!

'இளகின இரும்பைக் கண்டால் கொல்லன் தூக்கி அடித்துக் குத்துவான்!' – என்ற ஒரு பேச்சு நம்மத்தியில் உள்ளது.

தமிழ்த்தேசியக்கூட்ட

பக்கம் 03

## சங்கானைக் குருக்கள் சுட்டுக்கொலை; சிப்பாய் உட்பட மூவர் குற்றவாளிகள்!

### நாளை மேல்நீதிமன்றில் தீர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 21

சங்கானையில் ஆலயக் குருக்களைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்த இராணுவச் சிப்பாய் உள்ளிட்ட மூவருக் கும்எதிரானகுற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளதால், அவர்களுக்குத் தூக்குத்தண்டனை வழங் குமாறு அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந்த், தனது தொகுப்புரையில் யாழ்ப் பாணம் மேல்நீதி

பக்கம் 17

## ஆனந்தசுதாகரின் பிள்ளைகள் ஜனாதிபதிக்கு கருணை மனு!

### தந்தைக்குப் பொது மன்னிப்புக் கேட்டு

கொழும்பு, மார்ச் 21

அரசியல் தண்டனைக் கைதி ஆனந்தசுதாகரின் பிள்ளைகள் தந்தைக்குப் பொது மன்னிப்புக் கோரி ஜனாதிபதி மைத்திரிபால

பக்கம் 17

# மேலதிக நகர்வுகளை எடுக்குமாறு அமெரிக்கா இலங்கைக்கு வலியுறுத்தல்

கொழும்பு, மார்ச் 21

ஜெனீவா வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு இலங்கை மேலதிக நகர்வுகளை முன்னெடுக்கவேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இலங்கை தொடர்பான பூகோள கால மீளாய்வு அறிக்கை குறித்த விவாதத்தில் உரையாற்றிய போதே அமெரிக்கப் பிரதிநிதி இதனை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூறுவது மற்றும் மத சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைகளுக்குப் பொறுப்பானவர்களைப் பொறுப்புக்கூற வைப்பது உள்ளிட்ட ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலின் 30/1 தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு முன்வைத்த எமது பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளும் சிறிலங்கா அரசாங்கத்தின் முடிவை நாம் வரவேற்கிறோம்.

இந்தப் பரிந்துரைகளுக்கு இலங்கை அரசின் ஆதரவு இருப்பது குறித்து மகிழ்ச்சியளிக்கின்ற போதிலும், மனித உரிமை மீறல்கள், பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்தவர்களின் மீறல்கள், மத சிறுபான்மையினர் மீதான அண்மைய தாக்குதல்கள் குறித்த அறிக்கைகள் எம்மைக் கவலை கொள்ள வைக்கின்றன.

மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பானவர்களை பொறுப்புக்கூறவைக்குமாறும், மத சிறுபான்மையினரையும் அவர்களின் வழிபாட்டு இடங்களையும் பாதுகாக்குமாறும், நாங்கள் இலங்கை அரசைக் கேட்டுக் கொள்கிறோம்.

மனித உரிமைகள் கவுன்ஸிலின் 30/1 தீர்மானம் மற்றும் அதனை மீள உறுதிப்படுத்திய 34/1 தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு, மேலதிக நகர்வுகளை எடுக்குமாறு இலங்கை அரசைக் கோருகிறோம்.

இலங்கை அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பூகோள கால மீளாய்வு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் முன்னேற்றங்களை எதிர்பார்த்திருக்கிறோம் என்றும் அவர் தெரிவித்தார்.

## வவுனியாவில் அரசியல் கைதி தேவகனின் இறுதிக்கிரியை



வெலிக்கடை சிறையில் அரசியல் கைதியாக இருந்து நோய் வாய்ப்பட்டு மரணமடைந்த ச.தேவகனின் இறுதிக்கிரியைகள் வவுனியாவில் இடம்பெற்றன.

வவுனியா 3 ஆம் குறுக்குத் தெருவில் உள்ள அன்னாரது இல்லத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இறுதி நிகழ்வுகளை அருட்தந்தை நடத்தி வைத்திருந்தார்.

இதனையடுத்து ச.தேவகனின் பூதவுடல் வவுனியா தோணிக்கல் பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டிருந்தது.

விடுதலைப்புலிகளுக்கு வாகனம் எடுத்துக்கொடுத்தார் என்ற சந்தேகத்தில் 2008 ஆம் ஆண்டு பெப்ரவரி 10 ஆம் திகதி 60 வயதில் கைது செய்யப்பட்ட நீர்வேலியைச் சொந்த இடமாகவும் வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட சண்முகநாதன் தேவகன் 10 ஆண்டுகளாக அரசியல் கைதியாக தடுத்து வைக்கப்பட்டு வழக்குகளுக்கு பிரசன்னமாகியிருந்த நிலையில், 2 வருடங்கள் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டு வெலிக்கடை சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் தனது தண்டனைக்காலம் முடிவடையவுள்ள நிலையில் சந்தோசமாக காணப்பட்ட ச.தேவகனுக்கு கடந்த ஒக்ரோபர் மாதம் மீண்டும் புதிய வழக்கொன்று பதிவு செய்யப்பட்டு வழக்கு இடம் பெற்று வந்த நிலையில் உடல் மற்றும் உளரீதியாக பாதிக்கப்பட்ட அவர் நோய் வாய்ப்பட்டு வெலிக்கடை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றிருந்தார்.

எனினும், நோய் குணமடையாமையால் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த அவர் கடந்த 15 ஆம் திகதி மரணமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-100)

## நடமாடும் விற்பனை நிலையங்களில் உணவு வாங்குபவர்கள் அவதானம்!

வவுனியா ரயில் நிலைய வீதியில் அமைந்துள்ள அரச வங்கிக்கு அருகேயுள்ள நடமாடும் விற்பனை நிலையத்தை சுகாதார பிரிவினர் சுற்றிவளைத்து பரிசோதனை மேற்கொண் டுள்ளனர்.

இதன்போது, சுகாதாரச் சீர்கேடான உணவுப் பொருள்கள் அதிகமாக சுகாதாரப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தப் பரிசோதனை நேற்று மேற்கொள்ளப்பட்ட சமயத்தில் பழுதடைந்த மீன் போன்றவற்றை விற்பனை செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் நடமாடும் விற்பனை நிலையங்களில் உணவுப் பொருள்களை வாங்கும் மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்றும் சுகாதாரப் பிரிவினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் சுகாதாரப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

## இலங்கை அரசின் அறிக்கை இன்றைய ஜெனீவா அமர்வில்!



ஜெனீவா மனித உரிமை கவுன்ஸிலில் இன்று நடைபெறவுள்ள இலங்கை தொடர்பான விவாதத்தின் போது இலங்கை அரசு ஜெனீவா பிரேரணையை எவ்வாறு அமுல்படுத்துகின்றது என்பது குறித்த விரிவான அறிக்கையொன்றை மனித உரிமை கவுன்ஸிலுக்கு சமர்ப்பிக்கவுள்ளது.

இலங்கையின் சார்பில் இந்த விவாதத்தில் கலந்துகொள்ள அமைச்சர்களான திலக் மாரப்பன, சரத் அமுனுகம, பைஸர் முஸ்தபா ஆகியோர் இந்த அறிக்கையை இலங்கையின் சார்பாக மனித உரிமை கவுன்ஸிலில் சமர்ப்பிக்கவுள்ளனர்.

இதில் இலங்கை பல்வேறு சவால்களுக்கு மத்தியில் 30-/1 பிரேரணையை இலங்கை யில் அமுல்படுத்தி வருவதாக தெரிவிக்கவுள்ளது.

இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளவை வருமாறு:-

மனிதஉரிமைகள் கவுன்ஸிலில் கோரிக்கைக்கமைய மனித உரிமைகளுக்கானஉயர் ஆணையாளர் 2015 ஒக்ரோபர் 1 ஆம் திகதியிடப்பட்ட 30:1 ஆம் இலக்க தீர்மானத்தை நிறைவேற்றுவது மற்றும் இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் குறித்த விடயங்கள் தொடர்பிலான எழுத்து மூலமான அறிக்கை ஒன்றினை இன்று புதன்கிழமை ஐக்கிய நாடுகள் மனித உரிமை கவுன்ஸிலிடம் வெளிவிவகார அமைச்சர் சமர்ப்பிக்கவுள்ளார்.

இன்றைய கவுன்ஸில் அமர்வில் இலங்கைத் தூதுக்குழு வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் திலக் மாரப்பன தலைமையில் விசேட பணிகளுக்கான அமைச்சர் சரத் அமுனுகம மற்றும் அமைச்சர் பைஸர் முஸ்தபா ஆகியோருடன் கலந்துகொள்கின்றது.

மேலும், இந்த தூதுக்குழுவில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு சட்டமா அதிபர் திணைக்களம், ஒருங்கிணைக்கப்பட்ட நல்லிணக்கப் பொறிமுறைக்கான செயலகம் மற்றும் ஜெனீவாவிலுள்ள ஐ.நா.வுக்கான இலங்கையின் நிரந்தர தூதரகம் ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகளும் உள்ளடங்குகின்றனர்.

## ஓமந்தை நாவற்குள கிராமத்தில் வீதி புனரமைப்பு





வவுனியா, மார்ச் 21

வவுனியா ஓமந்தை நாவற்குள கிராமத்தில் அமைந்துள்ள பாவற்குள வீதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாத நிலையில் மக்களின் நலன் கருதி தற்போது புனரமைக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக இடம்பெற்ற யுத்தத்தின் பின்னர் வவுனியா ஓமந்தை நாவற்குள கிராமத்தில் மீள்குடியேற்றப்பட்ட 35 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள், வீதி சீரின்மையால் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வந்துள்ளனர்.

இந்த நிலையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பாக வவுனியா தெற்கு பிரதேச சபை, உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட கதிரவேலு கணேசலிங்கம் தனது சொந்த நிதியைக் கொண்டு இந்த வீதியை புனரமைத்துள்ளார்.

இது தொடர்பில் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் தெரிவிக்கையில்-

பலர் தேர்தல் காலங்களில் வீதியை திருத்தித் தருவோம் என வாக்குறுதிகளை வழங்கினார்கள். தேர்தல் முடிந்த பின்பு யாரும் இந்த பக்கம் வரவில்லை.பல சிரமங்களுக்கு மத்தியிலே இந்த வீதியால் எமது பிள்ளைகள், நோயாளிகள், வயோதிபர்கள் என பலரும் பயணம் செய்து வந்தனர்.

இந்த நிலையில் தேர்தல் காலத்தில் தான் வழங்கிய வாக்குறுதியினை கணேசலிங்கம் செய்து முடித்துள்ளார்.

அவர் தேர்தல் காலத்தில் சொன்ன விடயங்களை செய்து வருகிறார்.அவரது சேவை இந்தக் கிராமத்திற்கு வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

# எதிரணியின் வாயை மூடவே விசேட மேல் நீதிமன்றங்கள்!

## அரசைச் சாடுகிறார் பீரிஸ்



கொழும்பு, மார்ச் 21

**மக்களுக்கு ஆதரவான அரசியல்வாதிகளைச் சிறைக்குள் தள்ளி, எதிரணியை மௌனிக்கச் செய்யும் வகையிலேயே விசேட மேல் நீதிமன்றங்களை அமைக்க அரசு முயல்வதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:–

விசேட மேல் நீதிமன்றங்களை அமைக்கும் அரசின் முயற்சியானது திருடர்களைப் பிடிக்கும் திட்டமல்ல. நாட்டை ஊழலற்ற நாடாக மாற்றுவதற்கோ அல்லது சிறந்த அரசியல் கலாசாரத்தை ஸ்தாபிப்பதற்கான முயற்சியோ இல்லை. மாறாக மக்களுக்கு ஆதரவான அரசியல்வாதிகளைச் சிறைக்குள் தள்ளும் முயற்சியே இது.

மேலும், இதன்மூலம் ராஜபக்ஷக்களினதும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைவர்களதும் குடியுரிமையையும் நீக்கி, அரசியல் அரங்கிலிருந்து அவர்களை வெளியேற்றும் முயற்சியே தற்போது ஆரம்பமாகியுள்ளது – என்றார். (ஐ)

# புதிய மேல் நீதிமன்றங்களால் கடும் பீதியில் ராஜபக்ஷக்கள்

## அசாத் சாலி சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 21

புதிய மேல் நீதிமன்றங்கள் நிறுவப்படின் சிறைக்குச் செல்ல வேண்டும் என்ற பீதியிலேயே அதனை எதிர்த்து ராஜபக்ஷ தரப்பினர் மனுத் தாக்கல் செய்துள்ளனர் எனத் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:–

லஞ்சம், ஊழல் குற்றச்சாட்டுகள் மற்றும் மிகவும் சிக்கலான நிதிக்குற்றச்சாட்டுகள் தொடர்பான வழக்குகளைத் துரித கதியில் விசாரிப்பதற்காக மூன்று மேல் நீதிமன்றங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஆனால் மேல் நீதிமன்றங்களை அமைப்பதற்கு எதிராகக் கூட்டு எதிரணி உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளது. தமது களவுகள் வெளிப்படுத்தப்பட்டுவிடும் என்ற அச்சமே அவர்களின் இந்தச் செயற்பாட்டுக்குக் காரணம். ஏனெனில், இந்த நீதிமன்றங்கள் அமைக்கப்படின் மூன்று, நான்கு மாதங்களுக்குள் இவர்கள் அனைவரும் சிறைக்குச் செல்ல வேண்டி நேரிடும்.

எனவே, விசேட மேல் நீதிமன்றச் சட்டம் பிறப்பிக்கப்பட்டவுடன் உடனடியாக மூன்று மேல் நீதிமன்றங்களையும் அமைத்து அடுத்த நாடாளுமன்ற அல்லது ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் இவர்கள் அனைவரையும் சிறைக்குள்தள்ளவேண்டும்–என்றார். (ஐ)

# பொலிஸ் ஆணைக்குழு செயலாளர் பதவி நீக்கம்

கொழும்பு, மார்ச் 21

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர் பதவியிலிருந்து ஆரியதாஸ குரே நேற்று முதல் நீக்கப்பட்டுள்ளார்.

தான் அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டமை குறித்து தேசிய பொலிஸ் ஆணைக்குழு தனக்கு நேற்று அறிவித்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

புதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் அவரது வயதெல்லையே பதவி நீக்கத்துக்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, எதிர்வரும் 22ஆம் திகதி இடம்பெறவுள்ள ஆணைக் குழுவின் அடுத்த கூட்டத்தின்போது பதில் செயலாளர் ஒருவரை நியமிப்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் எனத் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் பி.எச். மனதுங்க தெரிவித்துள்ளார். (ஐ)

# ரணிலின் கீழ் இனிமேல் செயற்படவே முடியாது

## சு.க. உறுப்பினர்கள் ஜனாதிபதிக்குக் கடிதம்

கொழும்பு, மார்ச் 21

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் செயற்பட முடியாது என தெரிவித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் குழுவொன்று ஜனாதிபதிக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, பிரதமருக்கு எதிராகக் கொண்டுவருவதாகக் கூறப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் 42 பேரில் 35 பேர் கையொப்பமிடவுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

அதேவேளை, கூட்டு எதிரணியின் 51பேர் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பமிட்டுள்ளனர் என கூட்டு எதிரணியினர் நேற்று முன் தினம் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தனர்.

எனினும், துமிந்ததிசாநாயக்க, சரத் அமுனுகம உள்ளிட்ட 7 அமைச்சர்கள் ஜனாதிபதியுடன் கலந்துரையாடித் தீர்மானமொன்றுமேற்கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# முகப்புத்தகப் பதிவேற்றம்; சிப்பாய் விளக்க மறியலில்!

முகப்புத்தகம் ஊடாக இனங்களுக்கு இடையிலான ஒற்றுமையைச் சீர்குலைக்கும் வகையில் கருத்துக்களைப் பதிவு செய்தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் இராணுவ ச் சிப்பாய் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்தச் சந்தேக நபர் நேற்றுக் குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகளால் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். சந்தேக நபருக்கு எதிரான விடயங்களை ஆராய்ந்த கொழும்பு பிரதான நீதிவான் லால் ரணசிங்க பண்டார, சந்தேகநபரை எதிர்வரும் 03 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

கம்பஹா பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய முன்னாள் இராணுவ வீரர் ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# இலங்கையர்கள் இருவர் புளோரிடா கடலில் கைது

## சட்டவிரோதக் குடியேற்றவாசிகளாம்

சட்டவிரோதமான முறையில் அமெரிக்காவுக்குச் செல்ல முற்பட்ட இரண்டு இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த இருவரும் புளோரிடா கடற்பரப்பில் படகு ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டுள்ளனர் என அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இலங்கையர்களுடன், ஜமைக்கா, பஹாமாஸ் மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளைச் சேர்ந்த மேலும் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும், இவர்களை அமெரிக்கக் கடலோரப் படையினர் கைது செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆறு பேரும் தற்போது அமெரிக்காவின் எல்லைப் பாதுகாப்பு மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு அதிகாரிகளிடம் விசாரணைகளுக் காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என அந்தச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைப்பின் தலைவர்களின் நேற்றைய உரையைக் கேட்கும் போது எனக்கு இந்தப் பழமொழி தான் நினைவுக்கு வந்தது.

நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரும், ரெலோ கட்சியின் தலைவரும், கூட்டமைப்பின் முக்கிய பிரமுகருமான செல்வம் அடைக்கலநாதனுக்கு நேற்றுப் பிற்பகல் ஒரு தொலைபேசி அழைப்பு எடுத்தேன்.

*“ஹிட்லர் செல்வம் அவர்களுடன் பேசலாமா?”* – என்று நையாண்டியாகக் கேட்டேன்.

என்னுடைய கேள்வியின் அர்த்தம் புரியாமல் அவர் குழம்பி விட்டார் என்பது அவரின் பதிலில் இருந்து எனக்குத் தெரிந்தது.

*“ஏன் அப்படிக் கேட்கின்றீர்கள்?”* – என்று உரிமையோடு பதிலளித்தார் அவர்.

*“இல்லை எனக்கு முன்னால், இன்று காலையில் தமிழ்க் கூட்டமைப்பின் உள்ளூராட்சி உறுப்பினர்களாகச் சத்தியப்பிரமாணம் செய்த நண்பர்கள் இருவர் இருக்கின்றனர். அந்தப் பதவியேற்பு நிகழ்வில் உங்களின் பேச்சு ஹிட்லர்பாணியில் – சர்வதிகாரத்தனத்துடன் – இருந்தது என்பது அவர்களின் கருத்து. நானும் உங்கள் பேச்சை செவிமடுத்துப் பார்த்தேன். நீங்கள் மட்டுமல்லர், அங்குபேசியஉங்களின்ஏனைய தலைவர்கள் எல்லோரும் ஹிட்லர் பாணியில்தான் பேசியிருக்கின்றீர்கள்.”* – என்றேன்.

*“அப்படியா’?”* – என்று கேட்டார் அவர்.

*‘‘கட்சிக் கட்டுப்பாட்டை மீறும் உள்ளூராட்சி உறுப்பினர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை பாயும், அவர்கள் கட்சியை விட்டு விலக்கப்பட்டு உறுப்பினர் பதவியையும் இழக்க நேரிடும் என்றெல்லாம் ஆளாளுக்கு மிரட்டியிருக்கின்றீர்கள். தவிசாளர், உதவித் தவிசாளர் தெரிவுகளில் வாக்கெடுப்பு இரகசியமானதாக இருக்க வேண்டும் என்று எவரும் கோரக்கூடாது எனவும் கூடக் கட்சிக் கட்டளை பிறப்பிக்கப் பட்டிருக்கின்றதாம். இவ்வளவு ஒழுங்குக் கட்டுப்பாட்டோடு கட்சியை நடத்துவது நல்லதுதான். ஆனால் அது மேல் மட்டத்திலிருந்து அல்வா வர வேண்டும்? நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், மாகாண சபை உறுப்பினர்களுக்கும் இந்தக் கட்டுப்பாடு ஏதும் இல்லையா? அப்படி இருந்திருந்தால் வடக்கு மாகாண சபை முதல்வருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை வந்திருக்குமா? அந்தப் பிரேரணை தொடர்பில் கூட்டமைப்புக் கட்சிகள் நடந்து கொண்ட விதமே சந்தி சிரித்ததே. அப்போது இந்த ஒழுங்குக் கட்டுப்பாடு எல்லாம் எங்கு போயின? இந்த ஒழுங்குக் கட்டுப்பாடுகள் எல்லாம்நல்லவைதான். ஆனால், அரசியல் தீர்வு விவகாரத்தில் கூட்டமைப்பின்முடிவை–தீர்மானத்தை – எடுக்கும் விடயத்தில் இருந்து, எல்லா மட்டங்களிலும் இந்த ஒழுங்குக் கட்டுப்பாடு பேணப்பட வேண்டும். அதை விடுத்து, உள்ளூராட்சி உறுப்பினர்கள் விடயத்தில் மட்டும் ஒழுங்கு நடவடிக்கை பாயும் என்பது, இளகிய இரும்பைக் கண்டால் மட்டும் தூக்கிக் குத்தும் வேலைக்கு ஒப்பானதுதானே...! அப்படி சர்வதிகாரமாகப் பேசும் உங்களை ‘ஹிட்லர் செல்வம்’ என்று நான் அழைப்பது தப்பில்லைத் தானே...!”* – என்றேன்.

உரிமையோடு, நட்புடன் பேசுபவன் நான் என்பது அவருக்குத் தெரியும். அதனால் அதனை *‘ஓம் அண்ணே! ஓம் அண்ணே!!’* – என்று கேட்டு அவர் சகித்துக் கொண்டார்.

எனக்கு முன்னால் இருந்த – உள்ளூராட்சி உறுப்பினர்கள் இருவருக்கும் கூட வலு சந்தோஷம் – நான் செல்வத்திடம் இரண்டு கிழிகிழித்துக் கேள்வி கேட்டு விட்டேன் என்பதில்.

எது, எப்படியோ, கூட்டமைப்பின் கட்சிக் கட்டுப்பாட்டுச் சீத்தும் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர், உபதவிசாளர் தெரிவுகளின் போது அம்பலமாகும் என்று எனது மனது கூறிக் கொண்டது.

* * *

நேற்று நடந்த கூட்டத்தில் இன்னொரு விடயமும் உண்டு.

முன்னர் ஐ.தே.கட்சித் தலைவராகவும் முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகவும் இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா மிகவும் அரசியல் தந்திரசாலி. 1948 ஆம் ஆண்டு சுதந்திர இலங்கையின் முதலாவது அமைச்சரவையில் முக்கிய அமைச்சுப் பொறுப்பை வகித்த அவர் முப்பது ஆண்டுகள் கழித்து 1978 இல் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியை உருவாக்கி, அதில் தான் அமர்ந்து கொண்டார்.

அவரின் தந்திரப் போக்கு காரணமாக இலங்கை அரசியலில் அவரைக் ‘கிழட்டு நரி’ (Old Fox) என்று அழைப்பார்கள்.

அவரின் மருமகனும் இப்போதைய ஐ.தே.க. தலைவருமான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ‘நரித் தந்திரசாலி’ என கூட்டமைப்பு எம்.பி ஒருவர் நேற்று விமர்சித்திருந்தார்.

அது குறித்து கொழும்பில் இருந்து தமிழ் ஊடக நண்பர் ஒருவர் நேற்றிரவு தொலைபேசியில் கருத்து வெளியிட்டார்.

*“அதுவா? அது, இங்கு தினசரி நாங்கள் ஒரு தொலைக்காட்சியில் பார்க்கும் விடயம்தான். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விலங்கின் பெயர் குறிப்பிட்டு ரணிலை விமர்சிப்பார்கள். அந்த ஊடக உறவாடலின் – இணையின் – விளைவுதான் இந்தக் கருத்து வெளிப்பாடு. உந்தப் பேச்சாலை பிரதமர் கோபிக்காவிட்டாலும் மகாராஜா மகிழ்ந்திருப்பார்.... அது போதும் தானே...!”* – என்றார் அவர். அந்தக் கூற்றிலும் ஏதோ அர்த்தம் பொதிந்திருப்பதாகவே எனக்குத் தோன்றியது.

-மின்னல்-

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## தேசத் தலைவராக உயருங்கள்!

யாழ்ப்பாணத்திற்கு மீண்டும் ஒரு தடவை வருகை தந்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தமக்கு முன்பாக எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தமது மனதைத் தொடும் வகையில் உணர்வுபூர்வமாக உரையாற்றி, தமிழர்களின் எதிர்பார்ப்பை - உள்ளக்கிடக்கையை - பேரவாவை - அபிலாசையை - வெளிப்படுத்திய பின்னரும், அதற்குப் பதில் ஏதும் கூறாமல் சளாப்பிச் சென்றிருக்கின்றார்.

அந்த வகையில் ஜனாதிபதியின் இந்த யாழ்ப்பாண 'விசிட்' பத்தோடு பதினொன்றாக அரங்கேறி முடிந்திருக்கின்றது. வேறு ஒன்றும் நடக்கவேயில்லை.

தமிழில் ஒரு முதுமொழி உண்டு. "கணக்குப்பிள்ளைப் பேசக் கூடாது; கணக்குப் புத்தகம் பேச வேண்டும்." - என்பார்கள்.

சில விடயங்களைச் செய்தவர்கள் வாயால் சொல்லக்கூடாது. செயல்கள் காட்டவேண்டும்.

இந்த விடயம் ஜனாதிபதிக்கும் பொருந்தும். யாழ்ப்பாண மக்களுக்கு - தமிழ் மக்களுக்கு - அவர் என்ன செய்தார் என்பதை அவர் கூறுகின்றமையை விட, அவரது செயற்பாடுகள் - நடவடிக்கைகள் - வெளிப்படுத்தினால்தான் அது பொருத்தமாகவிருக்கும்.

தன்னை ஜனாதிபதியாக்கிய தமிழ் மக்களுக்குத் தான் நன்றியாக இருப்பார் என்றும் அந்த நன்றியை ஒருபோதும் மறக்க மாட்டார் என்றும் யாழ்ப்பாணத்தில் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருக்கின்றார்.

முன்னாள் வடக்கு மாகாண சபை விவசாய அமைச்சரும், தற்போது சபை உறுப்பினருமான பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியிருக்கின்றமை போல, தமிழ் மக்களுக்கான தனது நன்றியைத் தாம் மறக்கவில்லை எனக் கூறும் ஜனாதிபதி மைத்திரிபால, அதற்காகத் தமிழ் மக்களுக்கு பிரதியுபகாரமாக எதுவுமே செய்யவில்லை. எதனை எதிர்பார்த்து அவரை ஜனாதிபதியாக்குவதற்காக ஏனைய சிறுபான்மையினருடனும் கணிசமான பெரும்பான்மை மக்களுடனும் தமிழர்கள் ஒன்றிணைந்தார்களோ அதில் கிஞ்சித்தும் கூட அவர் இன்னமும் நிறைவு செய்யவில்லை என்பதுதான் உண்மை; யதார்த்தம்.

"காணாமலாக்கப்பட்டோரை கண்டறிய வேண்டியும், அரசியல் கைதிகளின் விடுதலையை அவாவியும், ஏதிலிகளாக அல்லலுறும் எமது மக்கள் தங்கள் இடங்களுக்குத் திரும்பவும், தமக்கு நீதியான - நிரந்தரமான - கௌரவமான - அரசியல் தீர்வைக் கோரியுமே தமிழ் மக்கள் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்தார்கள். ஆனால் அவை தொடர்பில் ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேன காத்திரமான நடவடிக்கை எதனையும் எடுக்கவேயில்லை." - என்று அவர் சுட்டிக்காட்டியமை மிகச் சரியான விடயம்.

யுத்தம் முடிவடைந்து சுமார் 9 ஆண்டுகள் முடிவுற்ற பின்னரும் - தமிழ் மக்களினதும் ஆதரவுடன் சேர்ந்து - மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்கு வந்து மூன்றேகால் ஆண்டுகள் கழிந்தும் - அவற்றுக்குக் குறிப்பிடத்தக்க தீர்வுகள் எவையும் காணப்படவேயில்லை.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஜெனீவா மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டியபடி -

"வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்தை காணாமற்போனோரின் உறவுகள் நிராகரித்து விட்டனர். அந்த அலுவலகத்திற்கு நியமிக்கப்பட்ட ஆணையாளர்கள் மீது அவர்கள் நம் பிக்கை கொள்ளவில்லை. அந்த அலுவலகம் குற்றமிழைத்தோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் ஏதும் அற்ற பொம்மை அமைப்பு" - என்றெல்லாம் அவர் சாடியிருந்தார்.

அத்தகைய அமைப்பு - அலுவலகம் - காணாமலாக்கப்பட்டோர் விடயத்தை கையாள்கின்றமையால் தான் அது குறித்து எதுவும் இங்கு - யாழ்ப்பாணத்தில் - பேசப் போவதில்லை என்று கூறி விடயத்தை மெல்லக் கை கழுவியிருக்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

இதுதானா தம்மை ஜனாதிபதியாகத் தெரிவு செய்த தமிழ் மக்களுக்கு ஜனாதிபதி செய்யும் கைம்மாறு? இதுதானா தமிழ் மக்கள் தமக்கு அளித்த அமோக ஆதரவுக்கு அவர் திரும்பச் செய்யும் செய்நன்றி?

ஜனாதிபதி அவர்களே! எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் முழுத் தமிழினத்தின் சார்பிலும் உங்களிடம் தெரிவித்தபடி, "தென்னிலங்கையின் தலைவர் என்ற நிலையில் இருந்து இலங்கையில் நீண்டகாலம் புரையோடிப் போயிருந்த தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு கண்ட ஒரு பெரும் தேசத்தலைவன் (Statesman) என்ற நிலைக்கு உயரும் அருமையான வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுங்கள்!"

- இதுதான் நமது வேண்டு கோளும் கூட.

தென்னிலங்கையின் இரண்டு கட்சிகளும் ஒன்று சேர்ந்து தேசிய அரசு அமைத்து, ஐக்கியப்பட்டுச் செயற்படும் வாய்ப்பு இனிக் கிடைக்குமா என்பது சந்தேகமே.

சம்பந்தன் குறிப்பிட்டமை போல இந்த வரலாற்று வாய்ப்பை வெற்றிகரமாக்கக்கூடிய சந்தர்ப்பம் ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கு வாய்த்திருக்கின்றது. சம்பந்தன் குறிப்பிட்டபடி அது அவரால் முடியும். ஆனால் அதற்கு, அடுத்த பதவிக் காலத்தின் மீதான குறுகிய அரசியல் ஆசையைத் துறந்து, நியாயத்துடனும் தியாகப் போக்குடனும் அவர் செயற்பட வேண்டும். செயற்படுவாரா?

## இலங்கைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தினம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நடைபெற்றது. அதில் பங்கேற்ற ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க இலங்கை அரசின் அறிக்கையை முன்வைத்து உரையாற்றினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

2017ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இடம்பெற்ற பூகோளக் காலக்கிரம மீளாய்வின் 3ஆவது சுழற்சியின் இறுதி அறிக்கையின் மேற்கொள்கைக்கு வருகை தந்திருப்பதில் நான் மகிழ்ச்சி அடை கின்றேன்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர், பூகோள கால மீளாய்வு செயலகத்தினர் மற்றும் புரூண்டி குடியரசு, கொரிய குடியரசு மற்றும் வெனிசுலா குடியரசு ஆகியவற்றை உள்ளடக்கிய மூவரடங்கிய குழு என்பன இலங்கையின் பூகோளக் காலச் செயற்பாட்டுக்கு வழங்கிய பங்களிப்புக்கும் ஒத்துழைப்புக்கும் நன்றி செலுத்த விரும்புகின்றேன்.

கடந்த நவம்பரில் மிகவும் ஆக்கபூர்வமான உரையாடலின்போது விதந்துரைக்கப்பட்ட 230 பரிந்துரைகளில் இலங்கை 177 பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு 12 தன்னார்வ வாக்குறுதிகளை வழங்கியது. மீதமுள்ள 53 பரிந்துரைகளை நாங்கள் கவனத்தில் எடுத்துள்ளோம்.

இலங்கை, பூகோளக் காலக்கிரம மீளாய்வில் வலுவான ஆதரவாளராக உள்ளது. மனித உரிமைகள் தொடர்பான முக்கியமான விடயங்கள் உரை யாற்றும் மற்றும் ஒருவருக் கொருவர் கற்றுக் கொள்வதை ஊக்குவிக்கும் திறந்த மற்றும் ஆக்கபூர்வமான ஈடுபாடுகளுக்காக அதன் சக மறுபரிசீலனை இயல்பு அனுமதியளிக்கிறது.

இந்தச் செயற்பாட்டை மிகக் காத்திரமாகக் கொண்டு செல்வதில் இலங்கை உறுதியாக உள்ளது.

ஐ.நா. அமைப்புக்கள் மற்றும் செயல்முறைகளுடன் ஆக்கபூர்வமான ஈடுபாட்டுக்கு உறுதியுடன் இருக்கின்றோம். அதேபோல் உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் மனித உரிமைகளை ஊக்குவிப்பதில் தனிப்பட்ட உறுப்பு நாடுகளுடன் இணைந்து ஈடுபடுகின்றோம்.

2015ஆம் ஆண்டின் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களைத் தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டதும், மாற்றியமைக்கப்பட்டதுமான பின்னணித் தொடரில் மனித உரிமைகள், ஜனநாயகம், சட்டவாக்கம் என்பவற்றை எடுத்துச் செல்லத் தரப்பட்ட மக்கள் ஆணைக்கு ஏற்ப, 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடந்த 3ஆம் சுழற்சியில் பங்குபற்றினோம்.

மேலும் நல்லாட்சி, பூகோளக் காலக்கிரம மீளாய்வின் சமரசம் மற்றும் நிலையான அமைதி, அனைவருக்கும் சமத்துவமும், கண்ணியமும் சமுதாயத்தின் பன்முக இயல்பை நிலைநிறுத்துவது மற்றும் நாட்டில் எல்லோரையும் உள்ளடக்கிய ஒப்புரவான வளர்ச்சி ஆகிய நோக்கங்களுடன் இலங்கை கலந்துரையாடியதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

கடந்த நவம்பரில் இலங்கையின் மதிப்பீட்டிலிருந்து 4 மாதங்களில் சில பரிந்துரைகளை நடை முறைப்படுத்தியுள்ளோம்.

2017ஆம் ஆண்டு டிசெம்பர் 5ஆம் திகதி இலங்கை சித்திரவதைக்கு எதிரான சர்வதேச உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டது.

இதன்மூலம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தேசிய தடுப்புப் பொறிமுறையாக நியமிக்கப்பட்டது. தேசிய தடுப்புப் பொறிமுறையின் பயனுள்ள மற்றும் திறமையான செயற்பாட்டுக்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவம் பெறுவதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவைத் துணைக்குழுவுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுள்ளோம்.

2018 மார்ச் 7ஆம் திகதி நாடாளுமன்றில் நடைமுறைப்படுத்தப்பட்ட பலவந்தமாகக் காணாமல் போகச் செய்தலிருந்து பாதுகாக்கும் சட்டத்திலிருந்து அனைத்து நபர்களின் பாதுகாப்புக்கான சர்வதேச உடன்படிக்கை நிறைவேற்றுப்பட ஏதுவாகியுள்ளது. இது நடைமுறையில் காணாமல் ஆக்கப்படுதலைக் குற்றமாக்குகிறது.

காணாமற்போனோர் சட்டத்தின் கீழ் அரசமைப்புச் சபையின் பரிந்துரைகளின் படி, ஜனாதிபதி, 2018ஆம் ஆண்டு பெப்ரவரி 28ஆம் திகதி காணாமற்போனோர் அலுவலகத்தின் தலைவர் மற்றும் ஆணையாளர்களை நியமனம் செய்தார். அந்த நியமன வழங்கலின்போது உரையாற்றிய ஜனாதிபதி, அந்த அலுவலகத்தின் திறமையான செயற்பாட்டை உறுதிப்படுத்த அரசின் முழுமையான ஆதரவை வழங்குவதாகத் உறுதியளித்தார்.

காணாமற்போனோர் அலுவலகத்தின் தலைவரின் அறிக்கை யைக் கடந்த 12ஆம் திகதி அனைவருக்கும் விநியோகித்துள்ளோம்.

2018ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தில் காணமற்போனோர் அலுவலகத்துக்கு 1.4 பில்லியன் (சுமார் 9 மில்லியன் அமெரிக்க டொலர்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசமைப்புச் சபை, தலைவர் மற்றும் ஆணையாளர்கள் தெரிவு செயல்முறையின் போது, சமூகத்தின் பிரதிநிதிகள், மனித உரிமைகளில் ஆர்வமுள்ளவர்கள் – ஆர்வலர்கள், முன்னாள் பொது ஊழியர்கள், தொழில் வாதிகள் மற்றும் காணாமற்போனோரின் உறவினர்களில் ஒருவர் ஆகியோரைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

உலகளாவிய மனித உரிமைத் தரங்களைக் கொண்டிருக்கும் புதிய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை உருவாக்கும் முயற்சி முன்னேற்றம் கண்டுள்ளது. உள்ளூர் மொழிகளில் மொழி பெயர்ப்பு உள்பட்ட நடைமுறைகள் நிறைவடைந்தவுடன் அந்த வரைவு நாடாளுமன்றுக்கு முன்வைக்கப்படும்.

சமரசம் மற்றும் இடைநிலை நீதி ஆகியவற்றை முன்னெடுத்துச் செல்லும் முகமாக அமைச்சரவை கடந்த 6ஆம் திகதி இழப்பீட்டு அலுவலகத்தின் உருவாக்கத்துக்குச் சட்டவரையாளரால் வரையப்பட்ட சட்டவரைவுக்கு ஒப்புதல் வழங்கியது. அந்தச் சட்ட வரைவு மொழிபெயர்க்கப்பட்ட பின்னர் அரச வர்த்தமானியில் வெளியிடப்படும்.

முரண்பாடுகளை அனுபவித்த ஒரு நாட்டுக்கு இப்போது சமரசம் செய்துகொள்ளுதல் மற்றும் மீளநிகழாமையிருத்தல் முக்கியமானவை. அதற்கமைவாகக் கடந்த ஆண்டு டிசெம்பர் 17ஆம் திகதி கண்ணிவெடிக்கு எதிரான சர்வதேச உடன்படிக்கையை (ஒட்டோவா உடன்படிக்கை) இலங்கை ஏற்றுக்கொண்டது. கடந்த மார்ச் முதலாம் திகதி கொத்துக் குண்டுகளைத் தடை செய்யும் சர்வதேச உடன்படிக்கையை இலங்கை ஏற்றுக்கொண்டது.

இலங்கையின் பன்முகச் சமூகத்தின் ஒரு பிரதிநிதிகளான முஸ்லிம் மக்கள் மீது நாட்டின் சில பகுதிகளில் இடம்பெற்ற தாக்குதல்கள் தொடர்பில் இந்தச் சபை அறிந்துள்ளது.

சில ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்கள் மற்றும் சில நபர்களால் தூண்டப்பட்ட இந்தக் கோழைத்தனமான செயல்களுக்கு ஜனநாயக, பன்முகத்தன்மை வாய்ந்த சமூகத்தில் இடமில்லை. அத்தகைய நடவடிக்கைகள் சம உரிமைகள் மற்றும் மற்றும் சட்டவாட்சி என்பவற்றுக்கு உத்தரவாதம் அளிக்கும் இலங்கையில் எமது பகிரப்பட்ட பிரக்ஞனைக்கு எதிரானது.

சட்டத்தின் சரியான செயன்முறைக்கு ஏற்ப இந்தச் சம்பவங்களில் ஈடுபட்ட அனைவருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்க நாம் உறுதியாக உள்ளோம். பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகள் வழங்கும் செயன்முறை முன்னெடுக்கப்படுகிறது– என்றார்.

(ஐ)

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 23/2 நியதிக் கேள்வி நேரத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் முறையான மருத்துவப் பதிவுகள் மற்றும் நோயாளிகளுக்கான அட்டைகள் என்பன பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்புகள் காணப்படவில்லை. யுத்த காலத்தில் பல்வேறுபட்ட மாவட்டங்களின் மருத்துவமனைகளில் சிகிச்சைபெற்ற முன்னாள் போராளிகள் தற்போது குறித்த மருத்துவமனைகளில் மருத்துவச் சான்றிதழ்கள் பெற இயலாதுள்ளது.

முன்னாள் போராளிகள் தொழில்வாய்ப்புகள் இன்றியும் போதிய வாழ்வாதார வசதிகள் இன்றியும் தொடர்ந்தும் துயரமான வாழ்க்கையையே மேற்கொண்டு வருகின்றனர். இத்தகைய நிலையில் இவர்களுக்கான நட்டஈடுகள் கிடைத்தால் அது இவர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவியாக அமையும்.

எனவே இவ்விடயம் தொடர்பாகச் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் இந்துமத விவகாரங்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனிடம் இந்தக் கோரிக்கையினை முன்வைக்கின்றேன்–என்றார். (ஐ)

## நாளை

22.03.2018
வியாழக்கிழமை
நட்சத்திரம் : கார்த்திகை மு.இ 6.30 வரை
திதி : பஞ்சமி பி.ப 2.26 வரை
சுபநேரம் : 7.47 –9.17 வரை
இராகுகாலம் : 01.47 – 03.17 வரை

# நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிக்க வியூகங்கள் அமைக்கின்றார் பிரதமர் ரணில்

கொழும்பு, மார்ச் 21

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை விரைவில் கூட்டு எதிரணி சமர்ப்பிக்கவுள்ளதாக கூறிவருகின்றது.

இந்த நிலையில், அதனை எதிர்கொண்டு தோற்கடிப்பதற்கான வியூகங்களை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்து வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பல்வேறு தரப்பினரிடமும் அரசியல் பிரதிநிதிகளுடனும் பேச்சு நடத்தி வருகின்றார்.

நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவைச் சந்தித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக



விரிவாகக் கலந்துரையாடியிருக்கின்றார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதுமட்டுமன்றி ஏனைய கட்சிகளுடனும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேச்சு நடத்தி வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது எவ்வகையான தீர்மானத்தை எடுக்கப் போகின்றார்கள் என இது வரையில் உறுதியாக அறிவிக்கப்படாத நிலையில் அவர்களின் ஆதரவையும் பெற்றுக்கொள்ளும் நோக்கில் ஐ.தே.க காய்களை நகர்த்தி வருகின்றது.

அதுமட்டுமன்றி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்திக்கவுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிக்க ஆதரவு வழங்குமாறு கோரவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிக்க ஆதரவு வழங்கும் என ஐக்கிய தேசியக் கட்சி நம்புகின்றது.

எவ்வாறெனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்களுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி எதிர்பார்க்கின்றது.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை சமர்ப்பிக்கப் போவதாக கூட்டு எதிரணி தெரிவித்து வருகின்ற நிலையில் தேசிய அரசியலில் மீண்டும் பரபரப்பான நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வெற்றியீட்டியதை அடுத்தே பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவர ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன தீர்மானித்துள்ளது.

## புத்தளம் வைத்தியசாலை தாதியர்; நேற்று வேலைநிறுத்தப் போராட்டம்




புத்தளம் ஆதார வைத்தியசாலை தாதியர்கள் நேற்று முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

வருடாந்தம் மேற்கொள்ளப்படும் இடமாற்றல் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டமைக்குஎதிர்ப்பு தெரிவித்தே இந்த வேலை நிறுத்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என அகில இலங்கை தாதியர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி.மெதிவத்த தெரிவித்தார்.

தாதியர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக புத்தளம் பொது வைத்தியசாலையின் அன்றாட மருத்துவச் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளனஎன்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கான பணி ஒவ்வொரு வருடமும் டிசெம்பரில் பூர்த்தி

கொழும்பு, மார்ச் 21

எதிர்வரும் ஒவ்வொரு வருடமும் கல்விப் பொது தராதர சாதாரண தர பரீட்சைக்கான அனைத்து பணிகளையும் டிசெம்பர் மாதத்திற்குள் பூர்த்தி செய்ய கல்வி அமைச்சு எதிர்பார்த்துள்ளது.

இதற்கமைவாக பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி டிசெம்பர் மாதம் பூர்த்தி செய்யப்படும்.

பரீட்சை ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் மாதம் முதலாம் வாரத்தில் ஆரம்பிக்கப்படும். விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணி உடனடியாக ஆரம்பிப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதற்காக பரீட்சை பணிகளில் ஈடுபடுத்தப்படும் சுமார் 30ஆயிரம் ஆசிரியர்களை பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணியிலும் ஈடுபடுத்த கல்வி அமைச்சும் பரீட்சைத் திணைக்களமும் தீர்மானித்துள்ளது.

## துப்பாக்கிச் சூட்டில் 7 பாதாள உலக உறுப்பினர்கள் பலி


கொழும்பு, மார்ச் 21

நாட்டில் பாதாள உலக குழுவினிடையே இடம்பெற்ற மோதலில், இந்த வருடத்தின் முதல் மூன்று மாத காலப்பகுதியில் மாத்திரம் 7 பேர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் பலியாகியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் ஆமர்வீதி மற்றும் அத்துருகிரிய ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோக சம்பவங்களில் இரண்டு பாதாளக் குழு உறுப்பினர்கள் பலியாகினர்.

இந்த வருடத்தின் கடந்த 3 மாத காலப் பகுதியினுள் கொழும்பு, கிராண்பாஸ், பத்தரமுல்லை, தலங்கம, பொரளை, வத்தளை மற்றும் அம்பாந்தோட்டை மிரிச்சவில ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற மோதல்களில் பாதாள உலகத்தை சேர்ந்த 5 பேர் பலியாகியமை குறிப்பிடத்தக்கது.

## நாலந்தா பழைய மாணவர் சங்கத்தின் தொழில் வழிகாட்டல் கண்காட்சி யாழில்!




கொழும்பு, மார்ச் 21

கொழும்பு நாலந்தா கல்லூரியின் கனிஷ்ட பழைய மாணவர் சங்கத்தால் நடத்தப்பட்டுவரும் 'Future Minds ' தேசிய உயர்கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் கண்காட்சியை வடக்கு, கிழக்கு பகுதிகளில் நடத்தவது தொடர்பில் தற்போது பேச்சு நடத்தப்பட்டு வருகிறது என அதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆண்டுக்கான 'Future Minds 2018' கண்காட்சி 13 ஆவது முறையாக எதிர்வரும் ஜூன் மாதம் 15 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சி கொழும்பு, கண்டி, காலி ஆகிய நகரங்களில் இடம்பெறவுள்ளது. இது தொடர்பாக நேற்றுமுன்தினம் கொழும்பு சங்கரில்லா ஹோட்டலில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இந்த கண்காட்சியை யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பகுதிகளில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே ஏற்பாட்டாளர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

கண்காட்சியை முடிந்தளவில் இம்முறை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு திட்டமிடுவதாகவும் அவ்வாறு இல்லாத பட்சத்தில் அடுத்த வருடம் நடத்துவதற்கு திட்டமிடவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

'எவரையும் கைவிடோம்' என்ற தொனிப்பொருளின்கீழ் ஜூன் 15 ஆம் திகதி ஆரம்பமாகும் இந்தக் கண்காட்சி மூன்றுதினங்களை கொண்டதாக 17 ஆம் திகதி வரை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் நடைபெறவுள்ளது.




## மன மாற்றத்தின் காலம்

எமக்கு சோதனைகள் வரும் போது எமதருகே யாரும் உதவிக்கு வராதபோது எம்மை அறியாமலே இறைவனை வேண்டிக் கொள்வோம். யாரிடம் செல்வோம் இறைவா வாழ்வு தரும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளது. என மனக்கலக்கமுறும் தருணங்களை எண்ணிப் பாருங்கள் இந்தத் தருணங்களில் எமது ஏலாமையில் சில சந்தர்ப்பங்களில் படைத்தவனையே திட்டித் தீர்த்தும் இருக்கலாம். இதை மீட்டுப் பார்க்கையில் நாம் நம்பிய கடவுள் எமது துன்பத்தில் கை விட்டு விட்டாரே என ஏங்கும் பொழுதுகளில் ஏற்படும் சஞ்சலங்கள், சந்தேகங்கள் எமது இறை பற்றுறுதியையே சோதிக்கின்றன.

''இறை பற்றில்லாதவர்கள் இவ்வாறு எண்ணி நெறி தவறிச் சென்றார்கள். அவர்களின் தீய ஒழுக்கமே அவர்களை பார்வையற்றோராக்கி விட்டது. அவர்கள் கடவுளின் மறைவான திட்டங்களை அறியவில்லை. தூய்மையான வாழ்வுக்கு கைம்மாறு உண்டு என நம்பவில்லை, மாசற்றவர்களுக்கு பரிசு உண்டு என உய்த்துணரவில்லை'' என்ற இறை வார்த்தை எம்மை சோதனையில் விழவிடாதேயும் எமது நம்பிக்கை வாழ்வை பலமாக்கி விசுவாசத்தை நிலைத்திருக்க பலம் தாரும் என வேண்டுவோர் தம் தவறை உணர்ந்து மனம் மாறக் கிடைத்த சந்தர்ப்பமாக தவக்காலத்தைப் பயனுள்ளதாக்குவோம். இறை திட்டத்தை ஏற்று நடக்க எமது தவறுக்காக மனம் வருந்தி தந்தையிடம் விரைந்து செல்வோம். எங்கள் பேரில் தயவாயிரும் என மனதுருகி வேண்டுதல் செய்வோம்.

செ.யோசப்பாலா

# யுத்தத்திற்குப் பின் திணறுகிறது இலங்கை

## வியாழேந்திரன் எம்.பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 21

யுத்தத்திற்குப் பின்னரான நிலைமாறுகால சூழலில் நாடு தடுமாறித் திணறுகிறது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கல்வி வலயத்திலுள்ள தன்னாமுனை புனித ஜோசெப் கல்லூரியின் 143ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இடம்பெற்ற கல்லூரி தின நிகழ்வில் அதிதியாகக் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.



இலங்கைத் திருநாட்டில் தலைதூக்கிய இனவாதமும் மதவாதமும் இன்று சர்வதேசம் வரை நம்மைக் கொண்டு சென்று நிறுத்தியுள்ளது.

யுத்தம் ஏற்பட்டு அதன் பின்னரான துப்பாக்கிச் சூடுகள் ஓய்ந்த நிலையில் ஏற்பட்டுள்ள நிலைமாறுகாலச்சூழலில் நாடும், நாட்டு மக்களும், சர்வதேசமும் இலங்கை பற்றி ஒரு ஸ்திரமான சூழலுக்குள் வரமுடியாமல் தடுமாறிக் கொண்டிருப்பதையே சமகால நிகழ்வுகள் நிரூபிக்கின்றன.

நாங்கள் அனைவரும் இலங்கை மாதாவின் பிரதிநிதிகள் என்ற அடிப்படையில் இனவாதத்தையும் மதவாதத்தையும் மறந்து செயற்பட்டால் அமைதியைக் கொண்டு வரமுடியும்.

இனவாதம் மதவாதம் அற்ற புதியதோர் இளஞ் சமுதாயத்தை உருவாக்கி அமைதியான நாடாக அவர்களுக்கு இந்த நாட்டை கையளிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# ஹாடி உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்குத் தங்குமிட வசதி



அம்பாறை, மார்ச் 21

அம்பாறை ஹாடி உயர் தொழில்நுட்பக் கல்லூரியில், முழு மையான கற்கை நெறியை தொடரும் மாணவர்களின் தங்குமிட பிரச்சினைக்குத் துரித தீர்வைப் பெற்றுக் கொடுக்க நிர்வாகம் உடன்பட்டுள்ளது என உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தக் கல்வி நிறுவனத்தின் மாணவர்களின் பிரச்சினை தொடர்பில் கவனம் செலுத்திய அமைச்சர் கபீர் ஹாஷிம், இரு தரப்பினர் களின் கருத்துக்களை கவனத்திற் கொண்டு, மாணவர்களுக்குத் தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு ஆலோசனை வழங்+கியுள்ளார்.

இதற்கமைய, முழுமையான கற்கைநெறியைப் பின்பற்றுவதற்காகப் பதிவு செய்துள்ள அனைத்து மாணவர்களுக்கும், தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படுமென்று, பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஹிலரி ஈ சில்வா தெரிவித்துள்ளார்.

# 15 வயதுச் சிறுமி துஷ்பிரயோகம்; இளைஞருக்கு மறியல் நீடிப்பு

புல்மோட்டை பகுதியில் 15 வயது சிறுமியொருவரை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய இளைஞரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் திருகோணமலை நீதிமன்ற நீதிவான் எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே அந்த இளைஞரை எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் புல்மோட்டை, கமாஸ்நகர் பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் மூன்று வருடங்களாக சிறுமியை காதலித்து வந்த நிலையில், சிறுமியை அழைத்துச் சென்று திருமணம் செய்து கொள்கிறேன் எனத் தெரிவித்து துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளார் எனச் சிறுமியின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர். இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சிறுமி குச்சவெளி வைத்தியசாலையில் பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### அநாமதேயமாகக்காணப்பட்ட

# மூன்றரை கிலோகிராம் கேரளக் கஞ்சா மீட்பு

ஏறாவூர் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, அநாமதேயமாகக் காணப்பட்ட பொதியொன்றிலிருந்து சுமார் மூன்றரைக் கிலோகிராம் கேரளக் கஞ்சாவும் கஞ்சாவை நிறுத்து விற்பதற்குப் பயன்படுத்தும் இலத்திரனியல் தராசும் நேற்றுமுன்தினம் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர், தைக்காவீதியை அண்டியுள்ள வீட்டு மதிலோரத்தில் அநாமதேயப் பொதி ஒன்று காணப்படுவதாகக் கிடைத்த தகவலையடுத்து, ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரியும் சிரேஷ்ட பொலிஸ் இன்ஸ்பெக்டருமான சிந்தக பீரிஸ் தலைமையிலான பொலிஸ் அணி அந்த இடத்துக்கு விரைந்து சென்று, இந்த கஞ்சாப் பொதியை மீட்டனர்.

கைப்பற்றப்பட்ட இந்தக் கஞ்சா, உள்ளூர் சந்தைப் பெறுமதியில் ரூபாய் 10 இலட்சம் பெறுமதியானது எனப் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இச்சம்பவம் பற்றி ஏறாவூர் பொலிஸார் விரிவான விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

# விபத்தில் இளைஞன் உடல் கருகிச் சாவு

### கிண்ணியா பகுதியில் சம்பவம்



திருகோணமலை தம்பலகாமம் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் டிப்பர் வாகனம் – மோட்டார் சைக்கிள் விபத்தில், மோட்டார்சைக்கிளில் பயணித்த இளைஞர் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார், மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

திருகோணமலை, தம்பலகாமம் பகுதியில் இருந்து கிண்ணியா வந்து கொண்டிருந்த டிப்பர் ரக வாகனமும் மூதூர் பகுதியில் இருந்து தம்பலகாமம் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி இவ்விபத்து இடம்பெற்றுள்ளது என, தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் உயிரிழந்தவர் மூதூர் நெய்தல் நகரைச் சேர்ந்த தௌபீக் ஹருனி என்று தெரிவிக்கப்படுகிறது.

இளைஞன் பயணித்த மோட்டார் சைக்கிள் டிப்பர் வாகனத்துக்குள் சிக்குண்டு இழுத்துச் செல்லப்பட்டமையால் அதன் பெற்றோல் வெளியேறியதால் , இளைஞன் உடல் கருகிப் பலியானார். அத்துடன் விபத்துக்குள்ளான டிப்பரும் தீப்பற்றியுள்ளது எனவும் கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.




# வன நாள் தினத்தை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகளுக்கு ஏற்பாடு

இன்று இடம்பெறவுள்ள சர்வதேச வன நாள் தினத்தை முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்படவுள்ளன என மகாவலி மற்றும் சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

மலையக நீர்த்தேக்க பகுதிகளில் வனவளத்தை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன்கீழ் மொறஹாகந்த மற்றும் விக்டோரியா நீர்த் தேக்கங்களுக்கு அருகிலுள்ள காடுகள் அபிவிருத்தி செய்யப்படும் என்று மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் அனுர திசாநாயக்க தெரிவித்தார்.

நாட்டில் தற்பொழுது 29.7 சதவீத வனவளமே உண்டு இதனை 32 சதவீதமாக அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தில் வன அழிப்பு தொடர்பான 2 ஆயிரத்து 500 குற்றச் செயல்கள் பதிவாகியுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். இந்த குற்றச்செயல்களுக்கு எதிராக சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என அவர் மேலும் குறிப்பிட்டார்.




# ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை; ஜனாதிபதியிடம் உதவி கோருகிறது மஹிந்த அணி



கொழும்பு, மார்ச் 21

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவு அளிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம், மஹிந்த ராஜபக்ஷ ஆதரவு கூட்டு எதிரணி கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கூட்டு எதிரணியைச் சேர்ந்த பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் காமினி லொக்குகே ஆகியோர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இரண்டு பிரிவுகளும் ஆதரவளிப்பது முக்கியம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு அளிக்குமாறு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தனக்கு ஆதரவாக உள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 44 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் உத்தரவிடுவார் என்று எதிர்பார்ப்பதாகவும் கூட்டு எதிரணி தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 106 உறுப்பினர்களும், அந்தக் கட்சியின் பக்கமுள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸூக்கு ஓர் உறுப்பினரும் உள்ளனர்.

எனினும், அத்துரலியே ரதன தேரரும், விஜேதாச ராஜபக்ஷவும், தற்போது சுதந்திரமான உறுப்பினர்களாகச் செயற்படும் நிலையில், ஐ.தே.கவுக்கு 105 உறுப்பினர்களே இருக்கின்றனர்.

அதேவேளை, கூட்டு எதிரணிக்கு 52 உறுப்பினர்களும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு 44 உறுப்பினர்களும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் 14 ஆயிரம் காசநோயாளர்கள்!

நாட்டில் சுமார் 4 ஆயிரம் காச நோயாளர்கள் சிகிச்சை பெறாமல் இருக்கின்றனர் என இலங்கை சுவாச நோய் விசேட வைத்தியர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் உள்ள காச நோயாளர்களின் எண்ணிக்கை 14ஆயிரம் ஆகும். இவர்களுள் 10ஆயிரம் பேர் மாத்திரமே சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டன.

இந்த நோய் தொடர்பில் சமூக மக்கள் மத்தியில் தவறான கருத்து நிலவுகின்றது. இந்த நோய்க்கு சிகிச்சை பெறுவதன் மூலம் இதனைக் குணப்படுத்தமுடியும். காச நோயாளர் தடுப்புதினம் இந்த மாதம் 24 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீரான தீர்வைக் கட்டமைப்புடன் புதிய உள்நாட்டு அரசிறை சட்டம்




கொழும்பு, மார்ச் 21

இதுவரை காலமும் அமுலில் இருந்த சிக்கலான தீர்வைக் கொள்கைக்குப் பதிலாக, எளிமையான சீரான தீர்வைக் கட்டமைப்பை ஏற்படுத்தும் நோக்கில் புதிய சட்டம் வரையப்பட்டுள்ளது என நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

புதிய சட்டம் பற்றி விளக்கிக் கூறும் கருத்தரங்கில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார். இதனை உள்நாட்டு அரசிறைத் திணைக்களம் ஏற்பாடு செய்திருந்தது.

அமைச்சர் புதிய சட்டம் தொடர்பாக தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்-

இலங்கையின் வருமான மட்டம் உயர்ந்த போதிலும் அதற்கு ஏற்ற விதத்தில் வருமான வரி அதிகரிக்கவில்லை. ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் வரியின் மூலம் கிடைக்கும் வருமானம் கீழான மட்டத்தில் உள்ளது எனத் தெரிவித்தார்.

இலங்கையின் அபிவிருத்திப் பணிகளுக்கும், கல்வி, சுகாதாரம் முதலான துறைகளின் முன்னேற்றத்திற்கும் வரி வருமானம் அத்தியாவசியமானது.

எனவே, வரி செலுத்த வேண்டிய சகலரும் வரி செலுத்துவதை சமூக கடமையாகக் கருத வேண்டும் எனவும் நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர கேட்டுக் கொண்டார்.

# இலங்கையில் அமைதி நிலை; எந்த அச்சமும் வேண்டாம்

## வெளிநாட்டவர்களுக்கு அமைச்சர் அழைப்பு

கொழும்பு, மார்ச் 21

இலங்கையில்தற்போது அமைதி நிலை ஏற்பட்டுள்ளது என சுற்றுலாத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக எந்தவித அச்சமும் இன்றி இலங்கைக்கு வருமாறு வெளிநாட்டவர்களிடம் அமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் கருத்து வெளியிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த வருடத்தில் 25 லட்சம் வரை சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் துரதிஷ்டவசமாக கண்டியில் வன்முறை சம்பவத்திற்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளது.

எனினும், தற்போது நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு



வரப்பட்டுள்ளது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலங்கைக்கு வெளிநாட்டவர்கள் வருகை தரமுடியும்.

சிறிய சம்பவத்தினால் சுற்றுலா துறையினுள் சில குழப்பநிலை ஏற்பட்டுள்ளதாகவும், எனினும் சுற்றுலாப் பயணிகளுக்கு பாதிப்பு ஏற்படவில்லை. இனியும் ஏற்படாது எனவும், நாடு பாதுகாப்பாக உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# த.தே.மக்கள் முன்னணியின் சத்தியப்பிரமாண நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 21

வடக்கின் உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்களுக்கான சத்தியப்பிரமாண நிகழ்வு இன்று மாலை 4 மணியளவில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் தமிழ்த் தேசிய மக்கள்முன்னணியின் தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணன் தலைமையில் இந்தச் சத்தியப் பிரமாண நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதேவேளை, சாவகச்சேரி மற்றும் பருத்தித்துறை நகரசபை என்பவற்றை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிகைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மக்களுக்கு தேவையான ஆடைகளை போதிய அளவு வழங்கத் தயார்!

## தேசிய ஆடை கைத்தொழில் திணைக்களம்

கொழும்பு, மார்ச் 21

எதிர்வரும் சிங்கள மற்றும் தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு மக்களுக்குத் தேவையான ஆடைகளை போதிய அளவு வழங்குவதற்கு தயாராக இருக்கிறோம் என தேசிய ஆடை கைத்தொழில்திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆடைகளைத் தெரிவு செய்வதில் புதிய ரக ஆடைகளை தயாரித்து மாகாண மட்டத்தில் விநியோகிப்பதற்கு தேசிய ஆடை கைத்தொழில் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# நிலைபேறான அபிவிருத்தி இலக்கு; செயலமர்வுகள் நேற்று ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 21
நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளத் தேவையான தரவுகள் தொடர்பிலான இரண்டு செயலமர்வுகள் நேற்று ஆரம்பமாகின.

பத்தரமுல்ல வோட்டர் எட்ஜ் ஹோட்டலில் ஆரம்பமான இந்த நிகழ்வில் சபாநாயகர் கரு ஜயசூரிய பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த செயலமர்வில் அரச, தனியார், சிவில் அமைப்புக்கள் ஆய்வு நிறுவனங்கள் என்பனவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# தினசரி ராசி பலன் (21.03.2018)

*2018 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் பங்குனித்திங்கள் 07 ஆம் நாள் புதன்கிழமை சதுர்த்தித்திதி பகல் 3.38 மணி வரை பின்னர் பஞ்சமி. நட்சத்திரம்.பரணி மாலை 7.01 மணி வரை பின்னர் கார்த்திகை. சித்தாமிர்தயோகம் முழுவதும்.*

**ராகுகாலம்** - *பகல் 12.17 மணி முதல் 1.48 மணி வரை*

**சுபநேரம்** - *மாலை 04.42 மணி முதல் 06.13மணி வரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *பங்குனி மாத வளர்பிறை சதுர்த்தி.*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *பரணி.*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்**
இன்பமான நாள். பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். ஆடை, அணிமணிச் சேர்க்கை உண்டாகும். பெண்களுக்கு திருமண காரியங்கள் ஒப்பேறும்.

**ரிஷபம்**
சஞ்சலமான நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். மனதில் இனம் புரியாத குழப்பம், பயம் தோன்றும். உடல் நிலை பாதிப்படையும். வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிக்கும்.

**மிதுனம்**
யோகமான நாள். தனலாபம் பெருகும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். அசையாச் சொத்துக்களை வாங்கும் யோகம் சிலருக்கு அமையும். வாகன யோகம் உண்டாகும்.

**கடகம்**
சம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். வியாபரத்தில் போட்ட முதலீடுகளில் நட்டம் உண்டாகும்.

**சிம்மம்**
ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. பணம் தாராளமாகப் புழங்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். எடுக்கும் முயற்சிகள் வெற்றியைத் தரும். சகோதர உறவு வலுவானதாக இருக்கும்.

**கன்னி**
அலைச்சல் மிகுந்த நாள். பணம் பற்றாக்குறையாக இருப்பதால் கடன் வாங்க அலைவார்கள். சிலர் உடல் நலம் பாதிப்படைந்து, மருத்துவ உதவியை நாடுவார்கள்.

**துலாம்**
மத்திம பலன்கள் காணப்படுகின்றன.பொருள் வரவு சுமாராக இருக்கும். தேவையற்ற வீண் செலவுகள் உண்டாகும். தொழிற் பிரிவினருக்கு வருமானம் மந்த நிலையில் காணப்படும்.

**விருச்சிகம்**
இனிமையான நாள். பணப்புழக்கம் திருப்தியைத் தரும். குடும்பத்தில் சந்தோஷம் குடிகொள்ளும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். விருந்தினர் வருகையால் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**தனுசு**
யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். தொழிற் பிரிவினர் முன்னேற்றமான சூழ்நிலையையும், கைநிறைய வருமானத்தையும் பெற்றுக் களிப்படைவார்கள். வீடு, வாகன யோகம் உண்டாகும்.

**மகரம்**
துன்பமான நாள். வர வேண்டிய பணம் வரத் தாமதமாகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். உடலில் ரோகங்கள் உண்டாகும். உறவினர்கள் தொல்லை தருவார்கள்.

**கும்பம்**
சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமும் இறக்கமுமாக இருக்கும். எண்ணிய காரியங்கள் தடைப்பட்டுப் போகும். திட்டமிட்ட பயணங்கள் தாமதமாகும்.

**மீனம்**
நன்மையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் பாசம், நெருக்கம் அதிகரிக்கும். பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கும். வியாபாரம் விறுவிறுப்பாக நடக்கும்.

**சந்திராட்டம நாள்: உத்தரம் 2ஆம், 3ஆம், 4ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1ஆம், 2ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# தமிழ், சிங்கள, முஸ்லிம் இளம் சமுதாய மத்தியில் புரிந்துணர்வை ஏற்படுத்துவதே இளைஞர் முகாமின் நோக்கம்

## தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 21
இளைஞர் முகாம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் தமிழ், சிங்கள, முஸ்லிம் இளைஞர் யுவதிகள் மத்தியில் புரிந்துணர்வு ஏற்படுத்தப்படுவதே என்று தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தலைவர் ஹெரந்திக்க ஹெலியங்கே தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

1984 ஆம் ஆண்டில் இளைஞர் முகாம் ஆரம்பிக்கப்பட்டது. இளைஞர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான அடித்தளம் அமைக்கும் நோக்கிலேயே இது ஆரம்பிக்கப்பட்டது.

இளைஞர்கள் யுவதிகள் மத்தியில் நல்லுறவை மேம்படுத்தி அவர்கள் மத்தியில் மறைந்திருக்கும் ஆற்றலை மேம்படுத்தி அவர்களை சமூகத்தில் அறிமுகப்படுத்துவது மற்றுமொரு நோக்கம்.

1983 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆம் திகதி இளைஞர் அலுவல்கள் மற்றும் தொழில் வாய்ப்பு அமைச்சராக பணியாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இலங்கை இளைஞர் சமூக சம்மேளனத்தை அமைத்தார்.

அதனைத் தொடர்ந்து இளைஞர் முகாம் ஆரம்பமானது. இம்முறை இளைஞர் முகாம் மார்ச் மாதம் 28 ஆம் திகதி முதல் 5 நாள்கள் நிக்கவரெட்டிய கால் நடைவள சபை வளவை கேந்திரமாகக் கொண்டு நடைபெறவுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# அர்ஜுன் மகேந்திரனை இலங்கைக்கு அழைத்து வரவே முடியாது: பிரதிபா மஹாநாம

கொழும்பு, மார்ச் 21
மத்திய வங்கி பிணைமுறி மோசடியின் பிரதான சூத்திர தாரியான அர்ஜுன் மகேந்திரனை இந்த நாட்டுக்கு கொண்டுவர முடியவே முடியாது என சிரேஷ்ட சட்டத்தரணியும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளருமான பிரதிபா மஹாநாம ஹேவா தெரிவித்தார்.

பிரதமர் அண்மையில் சிங்கப்பூர் சென்றிருந்த போதாவது, நண்பரே ! எமது நாட்டுக்கு வந்து தங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள முறைப்பாட்டுக்கு ஒரு முடிவு கட்டிவிட்டுச் செல்லுங்கள் என்று அர்ஜுன் மகேந்திரனிடம் கூறியிருக்கலாம். ஆனால், அதனைக்கூட பிரதமர் செய்யவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

பிரதமருக்கு எதிராக கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள 14 அம்சங்களில் 13 விடயங்களே மத்திய வங்கி பிணைமுறிமோசடி தொடர்பிலானவை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(க)

## இந்து சமயப் பேரவையின்

# யோகா வகுப்பு இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச் 21
இந்து சமயப் பேரவை யாழ். கந்தர்மடத்திலுள்ள தமது தலைமை அலுவலகத்தில் யோகா புதிய வகுப்புக்களை ஆரம்பிக்கின்றது. இவ் வகுப்புக்கள் இன்று புதன்கிழமை தொடக்கம் காலை 6 மணி முதல் காலை 7 மணி வரை ஒரு மாதம் தினமும் நடைபெறும். மேலும் பல்வேறு நேரங்களிலான யோகா வகுப்புக்களுக்கான பதிவுகளையும் மேற்கொள்ள முடியும்.

ஆர்வமுடைய அனைவரும் யோகா வகுப்புக்களில் இணைந்து பயனடைய முடியும் என்று இந்து சமயப் பேரவையின் செயலர் சி. சக்திகிரீவன் தெரிவித்துள்ளார்.

(இ)

# ஆலய உற்சவங்கள்

சாவகச்சேரி, மார்ச் 21
சாவகச்சேரி நுணாவில் மத்தி வைரவர் கோவில் என வழங்கும் அருள் மிகு ஸ்ரீகந்த சுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழா காலை 9.30 மணிக்கும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் முற்பகல் 11 மணிக்கும் இடம்பெறும்.

கொடியேற்றம், தீர்த்தம் ஆகிய தினங்களில் காலை 7 மணிக்கும் தேர் அன்று காலை 5.30 மணிக்கும் மற்றைய தினங்களில் காலை 9 மணிக்கும் மாலை 6 மணிக்கும் விழாக்கள் ஆரம்பமாகும்.

★ ★ ★ ★ ★ ★

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாள்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் புத்தாண்டு தினமான 14 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை 8.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

★ ★ ★ ★ ★ ★

தெல்லிப்பழை பன்னாலை ஸ்ரீபாலசுப்பிரமணிய சுவாமி ஆலய மகோற்சவம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை புத்தாண்டு தினத்தன்று முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

★ ★ ★ ★ ★ ★

நீர்வேலி வீரபத்திரப் பெருமான் ஆலய அலங்கார உற்சவம் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி 11 தினங்கள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 29 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (இ)

# நாளை மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை -

**யாழ் பிரதேசத்தில்** - வேலணைச் சந்தியிலிருந்து துறையூர் வரை, மடத்துவெளி வல்லான், ஆலடி சந்தி, புங்குடுதீவு, இறுப்பிட்டி, குறிகாட்டுவான், புங்குடுதீவு கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும்-

**கிளிநொச்சிப் பிரதேசத்தில்** - அக்கராயன்குளம், ஆனைவிழுந்தான், வன்னேரிக்குளம், சோலை, ஜெயபுரம், நாகபடுவான், பல்லவராயன்கட்டு, வேராவில், கிராஞ்சி, வலைப்பாடு, குமுழமுனை, கரியாலைப்படுவான், அன்புபுரம், முழங்காவில், நாச்சிக்குடா, வெள்ளாங்குளம், 651வது படைப்பிரிவு முகாம், 652வது படைப்பிரிவு முகாம், நாச்சிக்குடா கடற்படை முகாம், இயாஸ் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் -

**மன்னார் பிரதேசத்தில்** - நீராவிபுரம், கற்கடந்தகுளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

(இ)

வழிமூலம் -ceylon today
மொழியாக்கம் – நித்தியபாரதி



# ஐ.தே.க. வாக்குகளை சிதறடிப்பதற்கான முயற்சியில் மைத்திரி

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையிலான அதிகாரப் போராட்டமானது இருவரையும் மிகவும் மோசமாகப் பாதித்துள்ளதுடன் இவ்விருவரினதும் நீண்டகால அரசியல் மூலோபாயங்களின் வரையறைகளையும் வெளிப்படுத்தியுள்ளதாக சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இவ்விரு தலைவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற அதிகாரப் போட்டி சிங்கள பௌத்த இனவாதம் நாட்டில் தலைவிரித்தாடுவதற்கும் நாட்டில் வன்முறைகள் ஏற்படுவதற்குமான போலித்தனமான வெற்றியைக் கொடுத்துள்ளது.

எனினும், பெப்ரவரி 10 அன்று நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் தேசிய அரசாங்கத்தில் நிலவும் ஒற்றுமையின்மை வெளிப்படுத்தப்பட்டமை மக்கள் இலகுவாக மறந்துவிட முடியாது. இத்தேர்தல் பெறுபேறைத் தொடர்ந்து, மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை விட தனது அரசாங்கம் ஊழல் மிக்கதாக உள்ளது என மைத்திரிபால சிறிசேன அறிவித்திருந்தார்.

இதற்கு மாறாக, மைத்திரிபால சிறிசேனவை ஆட்சியிலிருந்து கவிழ்ப்பதற்கு முயற்சித்த ஐக்கிய தேசியக் கட்சியின் இளையோர்களை ரணில் அமைதிப் படுத்தியிருந்தார். ரணிலுக்கு எதிர்க்கட்சித் தலைவர் ஆதரவளித்திருந்தார். இதனால் நிலைமை சுமுகமாகியது.

ஜனநாயக நாடான சிறிலங்காவின் தலைவிதியானது 341 உள்ளூராட்சி சபைகளால் மட்டும் தீர்மா



னிக்கப்படமாட்டாது. இதற்கும் அப்பால் 2020ல் இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலிலேயே நாட்டின் தலைவிதி தீர்மானிக்கப்படும் என்பதே உண்மையாகும்.

ஜனநாயகம் நிலைநாட்டப்படாது, அரசியல் சாசனத்தில் மாற்றம் கொண்டு வரப்படாவிட்டால் 2020 ஜனவரியில் இடம்பெறும் ஜனாதிபதித் தேர்தல் மூலம் புதிய ஜனாதிபதி பதவியேற்க வேண்டும். அத்துடன் பெப்ரவரி 2020ல் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் ஆர்வம் காட்டமாட்டார் என்பதற்கு பல காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன.

எனினும் மஹிந்தவின் பெரும்பான்மை ஆதரவாளர்கள் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய நிறுத்தப்படுவார் என நம்புகின்றனர்.

இதேவேளையில், மறுபுறத்தே ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுமாறு ரணில் மற்றும் மைத்திரியிடம் அவர்களது ஆதரவாளர்கள் அழுத்தம் கொடுக்கலாம். இரண்டாம் தடவையாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடமாட்டேன் என ஜனாதிபதியாகப் பதவியேற்றபோது மைத்திரிபால சிறிசேன அறிவித்திருப்பினும் கூட, சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பாக மைத்திரியே அதிபர் வேட்பாளராக நிறுத்தப்படுவார் எனப் பலரும் நம்புகின்றனர்.

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் பெறுபேறானது தற்போது ஆட்சியிலுள்ள தேசிய அரசாங்கம் தொடர்பான நம்பிக்கையை சிதறடித்துள்ளதுடன் பல்வேறு முரண்பாடுகளையும் தோற்றுவித்துள்ளது.

முன்னைய ஆட்சியில் ஊழல்களில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனை வழங்கத் தவறியமையே தற்போது நடந்து முடிந்த தேர்தலில் பின்னடைவு ஏற்பட்டமைக்கான காரணம் என உள்ளூராட்சித் தேர்தல் முடிந்த பின்னர் ரணில் விக்கிரமசிங்கவால் கூட்டப்பட்ட முதலாவது ஊடக மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

சட்ட ஒழுங்கைக் கடைப்பிடிக்கத் தவறியமை, வாழ்க்கைச் செலவு அதிகரித்தமை, நாட்டில் வறட்சி மற்றும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டமை போன்றன ஐ.தே.க அரசாங்கத்திற்கான வாக்குகளைக் குறைத்துள்ளதாகவும் குறிப்பாக சட்ட ஒழுங்கு நிலைநாட்டத் தவறியமையே இதற்கான முக்கிய காரணம் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

நாட்டில் சட்ட ஒழுங்கு நிலைநாட்டப்படவில்லை என்கின்ற குற்றச் சாட்டை முன்னாள் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்நாயக்க ஏற்றுக்கொண்டமையுடன் இதற்காக தான் தனது அமைச்சுப் பதவியை இரா ஜினாமா செய்யவும் தயாராக இருக்கிறார் என்றும் தெரிவித்திருந்தார்.

எனினும், ஜனாதிபதியின் அழுத்தத்தின் காரணமாகவே ஊழல் குற்றச்சாட்டுக்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக தண் டனை வழங்கவில்லை என அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஜனாதிபதியின் தலையீடின்றி, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் ஏனைய குற்றவாளிகளை முன்னாள் சட்ட மற்றும் ஒழுங்கு அமைச்சர் மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பாதுகாத்திருக்க முடியாது.

கோட்டாபயவைப் பாதுகாக்கும் மைத்திரியின் மூலோபாயமானது தோல்வியடைந்துள்ளது என்பதையே அண்மையில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தல் பெறுபேறு தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றது. இருப்பினும், கோட்டாபயவை மைத்திரி பாதுகாக்கிறார் எனக் கூறுவதன் மூலம் சிறிசேனவின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்த முடியும் என



ரணில் நம்புகிறார் எனக் கூறுவது தவறானதாகும்.

கோட்டாபயவை மூன்றாவது வேட்பாளராக பயன்படுத்தாது, ரணில் சிறுபான்மை மக்களின் வாக்குகளைப் பெற்று மைத்திரியை வெற்றி பெற முடியும் என்பது தெளி வாகும். பெப்ரவரி 10 அன்று இடம் பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் மைத்திரி மற்றும் மஹிந்த பெற்ற வாக்குகள் ஐ.தே.க பெற்ற வாக்குகளை விட குறைவானதாகும். கோட் டாபயவை சட்டத்திலிருந்து தான் பாதுகாத்தமை தொடர்பான குற்றச் சாட்டை கடந்த ஜனவரியில் மைத்திரி ஏற்றுக்கொண்டிருந்தார்.

பிளவுபட்டுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் கடும்போக்கு சிங்கள பௌத்தர்களை ஒன்றிணைப்பதற்கு கோட்டாபயவே பொருத்தமான நபர் என்பதையும் இக்கட்சியின் தலைமைத்துவத்தை ஒருங்கிணைப்பதற்கும் கோட்டாபய தேவை என்பதை மைத்திரி யின் விசுவாசிகள் நம்புகின்றனர். இவ்வாறு அறிவித்ததன் மூலம், கோட்டாபய கைதுசெய்யப்படுவதிலிருந்து இவரை மைத்திரி பாதுகாத்துள்ளார்.

அத்துடன் சிங்கள இனத்தின் இரட்சகராக கோட்டாபய உள்ளார் என்பதையும் இதனால் உள்ளூராட்சித் தேர்தலில் கோட்டாபயவிற்கு மக்கள் வாக்களிக்க வேண்டும் என்கின்ற மறைமுகமான செய்தியை கடந்த ஜனவரி மாதம் மைத்திரி மக்களுக்கு விடுத்திருந்தார் என்பது தெளிவாகும்.

இதேவேளையில், ஐ.தே.க மீது மைத்திரி பழிசுமத்தியுள்ளார்.

## நல்லாட்சி அரசின் உள்வீட்டுச் சண்டையில் தொடரும் குத்துவெட்டுக்கள், குழப்பங்கள்

ஆனால் இவரின் இந்த அரசியல் மூலோபாயமானது முற்றிலும் எதிர்மறையான விளைவையே ஏற்படுத்தியுள்ளது.

மஹிந்த விசுவாசிகளைத் தனக்கு ஆதரவளிக்குமாறு உந்துதல் வழங்குவதற்குப் பதிலாக, முன்னாள் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்குமாறும் அவர்களை விட ஐ.தே.க மிக மோசமான ஊழல்களில் ஈடுபடுவதாகவும்

மைத்திரி பரப்புரை செய்துள்ளார். ஓகஸ்ட் 2015 பொதுத் தேர்தலில் ஐ.தே.க இழந்த அதேயளவு வாக்குகளை இத் தேர்தலில் மைத்திரியின் கட்சி பெற்றுள்ளது.

ஆகவே மைத்திரி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் எந்தவொரு வாக்குகளையும் பெற முயற்சிக்கவில்லை என்பதுடன் ஐ.தே.க வின் வாக்கு வங்கியை சிதறடிப்ப தற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார் என வாதிடமுடியும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிங்கள இனவாத வாக்குகளை மஹிந்தவின் புதிய கட்சியான சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்கு மைத்திரிபால சிறிசேன வழங்கியுள்ளார் எனக் கூறமுடியும். (இ)



# காட்டு வளங்கள்
# எம் உயிர் மூச்சு!

இன்று உலக காடுகள் நாள் (International Day of Forests). ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 21 நாள் உலக காடுகள் நாளாக சர்வதேசம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. இந்த உலக காடுகள் நாள் 1971 ஆம் ஆண்டு, ஐரோப்பிய கூட்டமைப்பு வேளாண்மை கூட்டத்தின் 23 ஆவது பொதுச் சபையில் நிறுவப்பட்டது. ஆயினும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபை 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதி மேற்கொண்ட தீர்மானத்தின் படி ஒவ்வொரு வருடமும் மார்ச் 21 நாள் ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு மூலம் ஆண்டு விழா கொண்டாடப்படுகிறது. காடுகளின் முக்கி யத்துவத்தைப் பற்றிய பொது விழிப்புணர்வுக்கு பங்களிப்புச் செய்வதற்கு நன்கு திட்டமிடப்பட்ட விதத்தில் இந்நாள் உருவாக்கப்பட்டது.நமது சந்ததிகளை பாதுகாக்க நமக்கு இயற்கை கொடுத்திருக்கும் வரங்களே காடுகள். மரங்கள் தான் சுற்றுச்சூழலை பாதுகாத்து மனிதனுக்குப் பல வழிகளிலும் உதவுகிறது.

மரங்கள் அடர்ந்த நிலப்பகுதி காடு அல்லது வனம் என்று அழைக்கப்படுகிறது. ஆனால் காடு என்பது வெறும் மரங்கள் மட்டுமல்ல அது ஓர் உயிரியல் சார்ந்த கட்டமைப்பு. காடுகள் என்பது ஒரே நாளில் உருவானவை அல்ல. பல ஆயிரம் ஆண்டுகளாக உருவானவை. ஆனால், அந்தக் காடுகளை மனிதன் எளிமையாக அழித்து விடுகிறான். ஒரு காடு அழியும் போது வெறும் மரங்கள் மட்டும்அழியாமல்அங்கிருக்கும்தாவரங்கள், மூலிகைகள், பறவைகள், விலங்குகள், புச்சிகள், புழுக்கள், எண்ணற்ற நுண்ணுயிர்கள் என அனைத்துமே ஒட்டுமொத்தமாக அழிந்து விடுகின்றன. காடுகள் அழிவதால் சுற்றுச்சூழல் அழிகிறது. பருவநிலையில் விரும்பத்தகாத மாற்றங்கள் ஏற்படுகின்றன.உலகின் பல பகுதிகளிலுமுள்ள காடுகள் காற்றிலுள்ள கரியமில வாயுவை உட்கொள்கின்றன. மேலும் இவை பல விலங்குகளுக்கு புகலிடமாக விளங்குகின்றன.

காடுகளில் பல வகைகள் உண்டு. காடுகளில் ஊசி இலைக்காடுகள், சதுப்பு நிலக் காடுகள், பசுமை மாறாக்காடுகள் என ஒவ்வொரு தட்பவெப்ப நிலைக்கும் ஏற்றாற்போல அமைந்துள்ளன. வெப்ப மண்டலக் காடுகள் உலகில் வாழும் 50 உயிரினங்களுக்கு உறைவிடமாக விளங்குகின்றன. உலக நிலப்பரப்பில் 30 சதவீத அளவுக்கு காடுகள் உள்ளன. இதில் 60 ஆயிரம் வகை தாவரங்கள் உள்ளன. இன்று பல வழிகளில் காடுகள் அழிக்கப்படுகின்றன. இதனால் ஏற்படப் போகும் ஆபத்துகள் கடுமையாக இருக்கும் என துறைசார்ந்த வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர்.



பூமியின் மேற்பரப்பில் உள்ள வாயு மண்டலத்தில் சுமார் 95 காற்றறை பரவியுள்ளது. இந்தக் காற்றினை உண்டாக்குவதில் முக்கியமான பங்கு வகிப்பது மரங்கள்தான். இந்த மரங்கள் தான் காற்றைச் சுத்தப்படுத்தும் பணியாளர்கள். உலகின் நான்கில் மூன்று பங்கு கடலாலும், ஒரு பங்கு மட்டுமே நிலப்பரப்பாக உள்ளது. இந்த ஒரு பங்கில் பாதியளவு மட்டுமே காடுகள் உள்ளன. இந்த காட்டுப் பகுதிகள் வளமாக இருந்தால் மட்டுமே நாம் வாழ முடியும்.

மனித இனம் அதன் வரலாற்றில் சந்தித்துள்ள நெருக்கடியான பிரச்சினைகளில் இது வரை சந்திக்காதது புவி வெப்பமடைதலால் ஏற்படும் பல்வேறு அழிவுகள்: இப்போது மாறிவரும் உலக வெப்பமயமாதலுக்கு காடுகள் அழிக்கப்பட்டதும் முக்கியமான காரணம். முக்கியமாக காடுகளை அழிப்பதை நிறுத்துவது மற்றும் புதிதாக அதிக மரங்களை வளர்ப்பது மூலம்தான் புவி வெப்பம் அடைதலைத் தடுக்க முடியும்.விவசா யத்தினை வளர்க்க பசுமைப் புரட்சி,மீன்களைப் பாதுகாக்க நீலப்புரட்சிமற்றும் பால் வளத்தை பாதுகாக்க, வெண்மைப்புரட்சி எனப் பல புரட்சிகள் நடந்துள்ளன. ஆனால் காடுகளையும் அவற்றில் வசிக்கும் விலங்குகளையும் பாதுகாக்க தீவிரமான புரட்சி கண்டிப்பாக நடத்தப்பட வேண்டும்.

உலகில் ஆபிரிக்கா, அமெரிக்கா, அண்டார்டிகா போன்ற கண்டங்களில் உள்ள காடுகளில் வாழும் உயிரினங்கள், தாவரங்களை பாதுகாக்க அந்தந்த நாடுகள் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன. அது குறித்த ஆராய்ச்சிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. ஆனால், நம் நாட்டை பொறுத்தவரை காடுகளில் மரங்களை அழித்து சிமெந்து கட்டடங்களை உருவாக்குகிறோம்.

மனிதனுக்கும் விலங்குகளுக்கும் முன்னொரு காலத்தில் காடுகள்தாம் புகலிடம். நாளடைவில் நாகரிகம் வளரத் தொடங்கியவுடன் மனிதன் காட்டை அழித்து நிலங்களைப் பிரித்துக் கொண்டான். ஆனால் இன்றும் காடுகள் வன விலங்குகளுக்குப் புகலிடமாகவே விளங்குகிறது. அதேபோலஇனி வரும் காலங்களில் மனித இனத்துக்கும் விலங்குகளுக்கும் ஆணி வேராகப் பயன்படும் காடுகளை அழிவின் பிடியில் இருந்து காப்பது நம் அனைவரின் கடமை. புதிதாகக் காடுகள் வளர்ப்பதற்கு நாம் போதிய முயற்சி எடுக்கவேண்டும். விலை மதிக்க முடி யாத காடுகள் அழிக்கப்பட்டால் விலங்கினம், பறவையினம் எனப் பல்லுயிர்த்தன்மை அழியும். பல்லுயிர்த்தன்மை அழிந்தால் மனித இனம் எங்கே போகும் என்பது விடைதேடமுடியாத வினாவாகிவடும்.




**காடுகளின் பயன்கள் சில**

காலநிலையை சீராக வைத்துக் கொள்வதில் காடுகள் முக்கிய பங்காற்றுகின்றன. காடுகளில் உள்ள மரங்களின் உதவியால் நாம் சுவாசிக்கிறோம்.ஆரோக் கியமான காற்று, சுற்றுச்சூழல் மற்றும் மாசுபாடுகளை நீக்குவதற்கு மரங்கள் மிக முக்கி யம். உலக – பூமி வெப்ப மயமாதலைத் தடுக்கவும் சீராக இருப்பதற்கு மரங்கள் மிக முக்கியம் சூரிய ஒளியிலிருந்தும் தப்பித்துக் கொள்ள மரங்களின் நிழல்தான் உதவுகின்றன. மேலும் காடுகள் வெள் ளப் பெருக்கை கட்டுப்படுத்துவதுடன், மண் அரிப்பையும் தடுக்கின்றன. நிழல், இலை, காய், கனி, மணம், குணம், பானம், மழை, குளுமை, தூய்மை, எண்ணெய், உறைவிடம், விறகு என மனித சமுதாயத்துக்கு பல வழிகளும் தாவரங்கள் நன்மை தருகின்றன

பூமியிலுள்ள தண்ணீரைச் சேகரித்து வெளயிடுவதற்கு காடுகள் பெரும் பங்கு வகிக்கின்றது. அத்துடன் தாவர மற்றும் விலங்கின வாழ்விடத்தை சமநிலையுடன் பராமரிக்கிறது. பூமியில் இயற்கையான அழகை வழங்குகின்றது. பயணத்தின் போது கண்களுக்கு குளிர்ச்சி தரவும், வாகனங்கள் வெளிவிடும் நச்சுப் புகையை கிரகிக்கவும் மரங்கள் எமக்குத் தேவை. மனிதன் வாழ்வதற்குத் தேவையான காற்றைக் கொடுப்பதில் காடு களின் பங்கு மிக அதிகம். இந்தக் காடுகள்தாம் மனித இனத்தின் வரம். மனிதன் வாழ இன்றியமையாத தண்ணீரை மழை மூலமாகவும், மண் அரிப்பினைத் தடுப்பது மூலமாகவும், பழங்களை உணவாகக் கொடுத்தும் மனிதனுக்குப் பல வழிகளில் காடுகள் உதவியாக இருந்து வருகின்றன.

**காடு அழிக்கப்படுவதால் ஏற்படும் விளைவுகள்**

காடுகளின் அழிவின் காரணமாக மண் அரிப்பு ஏற்படுகிறது. இதனால் நிலம் வறண்டுபோய் காணப்படுகிறது. மேலும் மண்ணின் உயிரியல் வளம் அழிந்து அந்த நிலம் எதற்கும் பயன்படாமலும் பாலை வனமாக மாறுகிறது. மரங்களின் அழிவால் காற்று மண்டலத்தில் காபநீர் ஒக்சைட் C2O அளவு அதிமாகி மழைப்பொழிவு குறைந்து விடுகிறது. காடுகள் அழிப்பால் காடுகளை நம்பிவாழும் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. உலக வனத்துறை சட்டப்படி, ஒரு மரத்தை வெட்டும் போது, 10 மரங்கள் நடப்பட வேண்டும். ஆனால் இருபது ஆண்டுகளில், ஒரு சதவிகிதம் மட்டுமே புதிய மரங்கள் நடப்பட்டுள்ளன. இதனால் மக்கள்காடுகளின்பயன்பாட்டைஉணர்ந்து அவற்றை பாதுகாப் பதன் அவசியத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். மேலும் மக்கள் மரம் வெட்டுதலை தவிர்ப்பதோடு அல்லாமல் மரம் வெட்டுபவர்களுக்கு எதிராகப் போராட வேண்டும். அப்படிச் செய்தால் மட்டுமே வெப்பத்தைக் குறைத்து, வெப்ப உயர்வால் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து உயிர்களையும் பயிர்களையும் காப்பாற்றமுடியும்

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்கங்களில் நாம் வாழ்ந்ததாக எமது ஆதிகால இலக்கியங்கள் கூறுகின்றன. இன்று காடும், காடு சார்ந்த பகுதியான குறிஞ்சியும், மலையும், மலை சார்ந்த பகுதியான முல்லையும் வலுவிழந்தும், பொலிவிழந்தும் காணப்படுகின்றன. காடு செழிப்பாக இருந்தால் மட்டுமே மழை வளம் பெற்று நாடு செழிப்பாக இருக்கும்என்பதுஉண்மை.தற்போது மரம் வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் எமக்கு தோன்றியுள்ளது. இருப்ப வற்றை பேணி பாதுகாக்கின்றோம் என்றால் அது இன்று மிகப்பெரிய கேள்விக்குறிதான். எனவே தற்போது உள்ள காடுகளை பாதுகாக்க பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.மனித இனம் மட்டுமின்றி காடுகளை நம்பி வாழும் உயிரினங்களாக விலங்கினங்களையும், பறவையினங்களையும் காத்திடவும் இனி வரும் காலங்களில் நாட்டின் அரசுகள் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்



ஆதிமனிதன் காட்டை நேசித்தான். காற்றை சுவாசித் தான். இன்றையமனிதன் பணத்தை நேசிக்கிறான் காட்டை அழிக்கின்றான். சுவாச காற்றுக்கு யாசிக்கிறான் என்றால் மிகையாகாது எனவே நேற்றைய மரங்களை பாதுகாப்போம். இன்றைய மரங்களை பராமரிப்போம். நாளைய மரங்களை பதியமிடுவோம்.

**ஆக்கம்: ம.பிரான்சிஸ்க்,**
**ஆசிரியர், யாழ். சண்டிலிப்பாய்**
**இந்துக் கல்லூரி**

மாநகர சபைக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள்

# மக்களை மறக்காமல் அவர்கள் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்

## மாநகர சபை உறுப்பினர்களுக்கு பிரதமர் அறிவுரை

கொழும்பு, மார்ச் 21

ரோஸி சேனாநாயக்க தலைமையிலான கொழும்பு மாநகர சபை கொழும்பு மாநகரத்தின் வறுமையை இல்லாதொழித்து அலங்கார மாநகரமாக மாற்றுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

அத்துடன், மாநகர சபைக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் மக்களை மறந்து விடாமல் அவர்களது பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு மாநகர சபைக்கு ஐக்கிய தேசியக் கட்சிக்காக போட்டியிட்டு வெற்றி பெற்றவர்கள் சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் பிரதமர் ரணில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கொழும்பு மாநகர சபைக்கு இது வரைக்கும் பெண் மேயர் ஒருவர் தெரிவு செய்யப்படவில்லை. முதற்தடவையாக பெண் மேயராக ரோஸி சேனாநாயக்க தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் அனுபவம் படைத்தவராவார். அமைச்சு பதவிகளை வகித்தவராவார்.

எனவே, கொழும்பு நகரை அபிவிருத்தி செய்வதற்கு முன்னின்று நடவடிக்கை எடுப்பார் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

இந்த நிலையில் கொழும்பு மாநகர சபையின் வெற்றிக்காக பாடுபட்ட அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இது பெரிய நகரமாகும். முக்கியத்துவம் வாய்ந்த நகரமாகும். எனினும் இந்த நகரத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்பவர்களே அதிகமாக உள்ளனர். ஆகவே இந்த நக ரத்தை அபிவிருத்தி செய்யவேண்டும்.

இந்த நகரத்தில் குப்பைப் பிரச்சினை மற்றும் டெங்கு நோயும் பிரதான பிரச்சினைகளாகக் காணப்பட்டன. ஆகவே இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும். மேலும் மத்திய அரசினால் உரிய நிதி ஒதுக்கீடுகளை நாம் முன்னெடுப்போம்.

எனவே ரோஸி சேனாநாயக்க தலைமையிலான கொழும்பு மாநகர சபை கொழும்பு மாநகரத்தின் வறுமையை இல்லாதொழித்து அலங்கார மாநகராக மாற்றுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

அத்துடன், மாநகர சபைக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் மக்களை மறந்து விடாமல் அவர் களது பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## வீதியில் மயங்கிக் கிடந்த வயோதிபர்; பொலிஸாரின் மனிதாபிமான செயல்



வவுனியாவில் மன்னார் வீதி வேப்பங்குளம் பகுதியில் வீழ்ந்து கிடந்த 67 வயதுடைய வயோதிபர் ஒருவரை அவரது வீட்டிற்கு அழைத்துச்சென்று பொலிஸார் ஒப்படைத்துள்ளனர்.

இந்தநிலையில்,பொலிஸாரின் மனிதாபிமான செயற்பாட்டை அந்தப் பகுதிமக்கள் வெகுவாக பாராட்டியுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்றுமுன்தினம்இரவு8.30மணியளவில்இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் மன்னார் வீதி, வேப்பங்குளம் பகுதி யில், வீதியில் அநாதரவற்ற நிலையில் வயோதிபர் ஒருவர் வீதியில் மயக்கமடைந்த நிலையில் வீழ்ந்து கிடந்துள்ளார்.

இந்த நிலையில் இரவு ரோந்து நடவடிக்கையை மேற்கொண்ட வவுனியா நெளுக்குளம்பொலிஸார் வீதியில் வீழ்ந்து கிடந்த வயோதிபரைத் தூக்கி நிறுத்தியதுடன்,அவருக்கு குடிப்பதற்கு தண்ணீர் வழங்கியுள்ளனர்.

தொடர்ந்தும் அவரின் உறவினர்களின் விவரங்கள் தொடர்பாக கேட்டறிந்ததுடன், தமது மோட்டார் சைக்கிளில் குறித்த வயோதிபரை ஏற்றிச் சென்று அவருடைய இடமான பண்டாரிக்குளம் பாடசாலைக்கு அருகில் உள்ள வீதியில் அவரது வீட்டில்ஒப்படைத்துள்ளனர்.

இதனையடுத்துநெளுக்குளம் பொலிஸாரின் மனிதாபிமான செயற்பாட்டையும், சேவையினையும் அப்பகுதி மக்கள் வெகுவாக பாராட்டியுள்ளனர்.

## கொழும்பு மாநகர சபையின் முதல் பெண் மேயரானார் ரோஸி!

கொழும்பு, மார்ச் 21

கொழும்பு மாநகரசபையின் முதலாவது பெண் மேயராக, ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ரோஸி சேனநாயக்க நேற்றுமுன்தினம் மாலை பதவி யேற்றுக் கொண்டார்.

கடந்த மாதம் நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் கொழும்பு மாநகரசபையை ஐக்கிய தேசியக் கட்சி கைப் பற்றியது.

இதையடுத்து அந்தக் கட்சியின் மேயராக வேட்பாளராக அறிவிக்கப்பட்ட, ரோஸி சேனநாயக்கவை கொழும்பு மாநகர முதல்வராக பிரகடனம் செய்யும் வர்த்தமானி அறிவிப்பு நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது.



இதையடுத்து, அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் மாலை நடந்த நிகழ்வில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் ஆகியோரின் முன்னிலையில், ரோஸி சேனநாயக்க கொழும்பு மாநகர முதல்வராகப் பதவியேற்றார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் கள், ஐ.தே.கட்சியின். முக்கிய தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## இடமாற்றம் கிடைத்தும் செல்ல விரும்பாத வவுனியா அரச உத்தியோகத்தர்கள்!

வவுனியா, மார்ச் 21

வவுனியா மாவட்டத்தில் கடந்த பல வருடங்களாக பணியாற்றும் அரச உத்தியோகத்தர்கள் பலருக்கும் அரச சுற்றுநிருபத்திற்கு அமைவாக இடம் மாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இடமாற்றம் கிடைத்துள்ள உத்தியோகத்தர்கள் பலரும் இடமாற்றத்தை ஏற்று வேறு இடங்களுக்குச் செல்லாது தமது அரசியல் மற்றும் அதிகாரிகளின் செல்வாக்கைப் பயன்படுத்தி தொடர்ந்தும் வவுனியா மாவட்டத்தில் கடமையாற்ற முயற்சித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நாடு முழுவதும் அரச உத்தியோகத்தர்களுக்கு அரச பொதுக் கொள்கை அடிப்படையில் இடம் மாற்றம் வழங்கப்படுகின்ற நிலையில் வவுனியா மாவட்டத்தில் பலர் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி அந்த மாவட்டத்தில் 10 வருடங்களுக்கு மேல் பணியாற்றி வருகின்றமை அரச நடைமுறைகள் குறித்து கேள்வி எழுப்பியுள்ளதாகவும் பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

(க-100)

## வயற் காணிகளின் பதிவேடுகள் பார்வைக்கு

வடமராட்சி மார்ச் 21

வடமராட்சி கிழக்கு அம்பன் கமலநல சேவைகள் நிலையத்திற்குட்பட்ட 4 கிராம சேவையாளர் பிரிவுகளில் வயற் காணிப் பதிவேடுகள் தயாரிக்கப்பட்டு, விவசாயிகளின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன என அம்பன் கமநல சேவை பெரும்பாக உத்தியோகத்தர் திருமதி எஸ்.திருப்பதி அறிவித்துள்ளார்.

செம்பியன்பற்று தெற்கு, மருதங்கேணி, ஆழியவளை, முள்ளியான் ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளின் வயற் காணிப் பதிவேடுகள் தயாரிக்கப்பட்டு விவசாயிகளின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இப் பதிவேடுகளை விவசாயிகள் பார்வையிட்டுச் சீர்செய்துகொள்ளலாம் என்றும் பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (இ)

## நுவரெலியா மாவட்டத்திலேயே பாடசாலை செல்லாத மாணவர்கள் எண்ணிக்கை அதிகம்

### யாழ்.மாவட்டத்தில் மிகக் குறைவு

கொழும்பு, மார்ச் 21

பாடசாலை செல்லாத மாணவர்கள் நுவரெலியா மாவட்டத்திலேயே அதிகளவில் காணப்படுகின்றனர்.

பாடசாலை செல்லாத மாணவர்களில் குறைவாக எண்ணிக்கையை கொண்ட மாவட்டம் யாழ்.மாவட்டம் என ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

நாட்டில் பாடசாலைக் கல்வியை கற்கவேண்டிய வயதைக்கொண்ட பிள்ளை களில் 3.4 சத வீதமான பிள்ளைகள் ஒருநா ளேனும் பாடசாலைக்குச் செல்லவில்லை என்று தொகை மதிப்பீட்டு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் மேற்கொண்ட ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

5 வயதிற்கும் 20 வயதிற்கும் இடைப்பட்ட சிறுவர்கள் தொடர்பில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.இந்த வயதிற்குட்பட்ட 95 சத வீதமானோர் பாடசாலைக் கல்வியை தொடர்வதாக இந்த ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

# காலத்தால் என்றும் மறக்க முடியாதவர்

# மாற்றுத் திறனாளிகளின் நாயகர் ஹாக்கிங்!

நேற்றைய தொடர்ச்சி ...

ஹாக்கிங்ஏற்படுத்தியபிரத்தியேகத் திருப்பு முனையானது இஸ்ரேலிய கோட்பாட்டு இயற்பியலாளர் ஜேக்கப் பெக்கன்ஸ்டைனுடன் ஹாக்கிங் போட்ட சண்டையின் விளைவுதான்! கருந்துளைகளின் வெப்பத்தைப் பற் றிய விவாதம் தான் அது. கருந்துளைகள் வெப்ப ஆற்றல் சிதறல் (என்ட்ரோப்பி) என்ற பண்பைக் கொண்டிருப்பதாக பெக்கன்ஸ்டைன் கூறியதை மறுத்த ஹாக்கிங் கருந்துளையிலிருந்து எதுவும் தப்ப முடியாது. ஆகவே, அதன் வெப்பநிலை பூஜ்ஜியமாகத்தான் இருக்க வேண்டும் என்றார்.

இந்த விவாதத்துக்கு விடை காண்பதற்காக அணுவளவு கருந்துளைகளின் இயல்புகளை ஆராய்வதென ஹாக்கிங் முடிவுசெய்தார். இதற்காக, அணுவுலகின் புதிரான விதிகளின் தொகுப்பான குவாண்டம் கோட்பாட்டுடன் ஈர்ப்பு விசையை முடிச்சுப்போட வேண்டியிருந்தது. அதுவரை யாருமே வெற்றிகரமாக இந்த முடிச்சைப் போட்டிருக்கவில்லை. அவரது கணக்கீடுகள் ஒரு திசையைச் சுட்டிக்காட்டின. கருந்துளைகளிலிருந்து அணுத்துகள்களும் கதிர்வீச்சும் உமிழப்படுகின்றன என்பதுதான் அது. ஆக, பெக்கன்ஸ்டைன் சரி என்பதை ஹாக்கிங்கின் கண்டுபிடிப்பு உறுதிசெய்தது.

குவாண்டம் கோட்பாட்டின் இயல்பான அம்சமாக இருக்கும் -ஒழுங்கின்மை- (ரேண்டம்னஸ்) குறித்து ஐன்ஸ்டைன் கூறியமையை ஹாக்கிங் சற்று விரிவாக்கி இப்படிச் சொன்னார், கடவுள் இந்தப் பிரபஞ்சத்துடன் பகடை உருட்டி மட்டும் விளையாடவில்லை, யாராலும் பகடைகளைப் பார்க்க முடியாத இடத்தில் சில சமயம் அவற்றை எறிகிறார்.

ஹாக்கிங்கின் கருத்து குவாண்டம் இயற்பியலின் அஸ்திவாரத்தையே அசைப்பதாக இருக்கிறது என்று இயற்பியலாளர்கள் கருதினார்கள். குவாண்டம் கோட்பாட்டைப் பொறுத்தவரை, தகவல் என்பது எப்போதும் காப்பாற்றப்படக் கூடியது, மீட்டெடுக்கப்படக் கூடியது; எந்தத் தகவலும் தொலைந்துபோவதே இல்லை.

2004 இல் தனது தோல்வியை ஒப்புக்கொண்டார் ஹாக்கிங்! கருந்துளைக்குள் சென்ற தகவல்களெல்லாம் கருந்துளை வெடிக்கும்போது மீண்டும் வெளிவந்துவிடும். அவர் இப்படி ஒப்புக்கொண்டாலும் இந்தத் தகவல் முரண் பிரச்சினை இன்னும் தீர்ந்த பாடில்லை. கருந்துளைக்குள் தகவல்கள் எப்படிப் போகின்றன, எப்படி வெளிவருகின்றன என்பதை இன்னும் அறிந்துகொள்ள முடியவில்லை என்கிறார்கள் இயற்பியலாளர்கள்.

1974 ல் ஃபெல்லோ ரோஃப் ராயல் சொஸைட்டியாக ஹாக்கிங் தேர்ந்தெடுக்கப்பட்டார். உலகின் மிகப் பழமையான அறிவியல் அமைப்பு றோயல் சொஸைட்டி . 1982 இல் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் கணிதத்துக்கான லூகாஸியன் இருக்கைக்காக ஹாக்கிங் நியமிக்கப்பட்டார். நியூட்டன் இருந்த பதவி அது. இது நியூட்டனின் இருக்கை என்று சொல்வார்கள், ஆனால் நிலைமை நிச்சயம் இப்போது மாறிவிட்டது என்று அடிக்கடி பொடிபோட்டுப் பேசுவதுண்டு ஹாக்கிங்.

**தொழில்நுட்பக் குரல்**

1974 வரை ஹாக்கிங்கால் பிறருடைய உதவியின்றி உணவு உண்ணவும் படுக்கையிலிருந்து எழவும் முடிந்தது. கையை ஊன்றி, தன் உடலை இழுத்துக் கொண்டு நகருவார். கொஞ்ச நஞ்சம் மிச்சமிருக்கும் தசை வலுவைக் காத்துக் கொள்வதற்காகச் சில ஆண்டுகள் இப்படிச் செய்தார். 1980 லிருந்து செவிலியரின் தயவில் வாழ வேண்டிவந்தது. 1985 வரை ஹாக்கிங்கால் ஏதோ கொஞ்சம் கொஞ்சம் பேச முடிந்தது. ஒருமுறை,



சுவிற்ஸர்லாந்துக்குச் சென்றிருந்த போது ஹாக்கிங்குக்கு நுரையீரல் அழற்சி (நிமோனியா) ஏற்பட்டது. உயிர்க் காப்புச் சாதனத்தை (லைஃப் சப்போர்ட்) நிறுத்திவிடலாமா என்று மருத்துவர்கள் கேட்டதற்கு, ஹாக்கிங்கின் மனைவி ஜேன் மறுத்துவிட்டார். ஹாக்கிங்கின் உயிரைக் காப்பாற்றுவதற்காக சுவாசக் குழாய் ஒன்றை மருத்துவர்கள் செருகினார்கள். ஹாக்கிங் பிழைத்துக்கொண்டார், அவரது குரலோ நிரந்தரமாக மௌனமானது.

ஆங்கில எழுத்துகள் அடங்கிய பலகையில் எழுத்துகளைச் சுட்டிக்காட்டுவதன் மூலம் அவரது தகவல்தொடர்பு கொஞ்ச காலம் நீடித்தது. வால்ட்டர் வோல்டோஸ் என்ற கணினி நிபுணர் ஹாக்கிங்கின் நிலையைப் பற்றிக் கேள்விப்பட்டு, தான் எழுதிய ஈக்குவலைஸர் என்ற கணினி நிரலைத் தந்து ஹாக்கிங்குக்கு உதவினார். இன்னும் அசைக்க முடிகிற வகையில் இருக்கும் விரல்களைக் கொண்டு ஒரு பொத்தானை அமுக்குவதன் மூலம் ஆங்கில எழுத்துக்களும், 2,500 இற்கு மேற்பட்ட எழுத்துகளும் அடங்கிய அட்டவணையை ஹாக்கிங்கால் பயன்படுத்த முடிந்தது.

ஒவ்வொரு சொல்லாக, ஒவ்வொரு எழுத்தாக வாக்கியங்களைக் கணினித் திரையில் ஹாக்கிங் உருவாக்குவார். கணினியிலிருந்து அந்த வாக்கியங்கள் பேச்சு உருவாக்கிக் கருவிக்கு அனுப்பப்பட்டுக் குரல் போன்று ஒலிக்கும்.

ஒட்டுமொத்த சாதனங்களும் ஹாக்கிங்கின் இயந்திர சக்கர நாற்காலியுடன் இணைக்கப்பட்டிருந்தன.

விரலை அசைக்கக்கூட முடியாத அளவுக்குப் பலவீனமாக இருந்தால் அகச்சிவப்புக் கதிர் மூலமாகக் கணினியுடன் அவரால் தொடர்பு கொள்ள முடியும். வலது கன்னத்தைச் சுருக்குவதன் மூலமோ, கண்ணியை மூடித்திறப்பதன் மூலமோ இந்தத் தொழில்நுட்பத்தை இயக்க முடியும். இந்தத் தொழில்நுட்பத்தை விரிவுபடுத்தி, பிறருடைய உதவியின்றி அவர் தனது அலுவலகக் கதவைத் திறக்கவும் தொலைபேசியைப் பயன்படுத்தவும் அவருக்கு வழிசெய்து தரப்பட்டது.

ஒரு நிமிடத்துக்கு 15 சொற்கள் வரை அவரால் உருவாக்க முடிந்தது. குரலை இழக்கும் முன் பேசியதைவிட கணினி மூலம் ஓரளவு நன்றாகவே பேச முடிகிறது என்றார் ஹாக்கிங். அவரது ஒரே புகார் என்னவென்றால் இங்கிலாந்துக்காரரான தனது செயற்கைக் குரலில் அமெரிக்க ஆங்கில வாடை அடித்ததுதான். அந்தப் பேச்சுக்கருவி கலிபோர்னியாவில் தயாரிக்கப்பட்டதுதான் இதற்குக் காரணம்!

காலத்தின் சுருக்கமான வரலாறு என்ற நூலைத் தான் எழுத நேர்ந்ததற்குக் காரணம், இந்த பிரபஞ்சத்தைப் பற்றிய கண்டுபிடிப்புகள் குறித்த தனது பரவசத்தைத் தனது ஆராய்ச்சிக்கு நிதியுதவி வழங்கிய பொதுமக்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்ற ஆசைதான் என்றார் ஹாக்கிங். புத்தகத்தின் அசாதாரணமான வெற்றி அவரைப் பணக்காரராகவும், உலகெங்கும் உள்ள மாற்றுத்திறனாளிகளின் நாயகராகவும் ஆக்கியது.

எதைப்பற்றி நீங்கள் அதிகம் நினைத்துக் கொண்டிருப்பீர்கள்? என்று நியூ சயன்டிஸ்ட் இதழ் ஒருமுறை ஹாக்கிங்கிடம் கேட்டது. பெண்கள். அவர்கள்தான் எனக்குப் பெரிய புதிர்! என்று பதிலளித்தார் ஹாக்கிங்.

**நோபலை மிஞ்சிய கண்டுபிடிப்பு**

1982 இல் பிரிட்டிஷ் பேரரசின் கமாண்டர் என்ற கௌரவப் பதவி ஹாக்கிங்குக்கு அளிக்கப்பட்டது. 2012, லண்டனில் நடைபெற்ற பாராலிம்பிக்ஸ் விளையாட்டுப் போட்டிகளின் தொடக்க நிகழ்வின் நாயகர் ஹாக்கிங்தான். அவருக்கு அளிக்கப்படாத ஒரே ஒரு கௌரவம் நோபல் பரிசுதான். அதைப் பற்றியும் கனகச்சிதமாக ஹாக்கிங் இப்படி சொன்னார், ஆராய்ந்து பார்த்து உறுதி செய்யப்பட்ட கோட்பாட்டியல் பணிகளுக்குத்தான் நோபல் பரிசு வழங்கப்படுகிறது. நான் எந்த விஷயம் குறித்துக் கோட்பாடுகளை உருவாக்கினேனோ அதை ஆராய்ந்து பார்ப்பது மிக மிகக் கடினம்!

மனித குலம் நீடிப்பதற்கு விண்வெளி ஆராய்ச்சி மிகவும் முக்கியம் என்றார் ஹாக்கிங். உலகளாவிய அணுஆயுதப் போர், மரபணுத் தொழில்நுட்பம் மூலம் வடிவமைக்கப்பட்ட வைரஸ், இன்னும் நாம் கற்பனையே செய்திராத ஆபத்துகள் போன்றவற்றால் ஏற்படும் பேரழிவால் பூமியில் உயிர்வாழ்க்கைத்துடைத்தழிக்கப்படுவதற்கான சாத்தியம் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது என்று ஹாக்கிங் 2007 இல் கூறினார்.

கடவுளையும் மதத்தையும் பற்றி ஹாக்கிங் கூறியவை பெரும் எதிர்ப்பையும் சர்ச்சையையும் கிளப்பிவிட்டன. பிரபஞ்சத்தின் உருவாக்கத்தைப் பற்றி விளக்குவதற்கு இந்தப் பிரபஞ்சத்தின் வெளியில் உள்ள, கடவுள் போன்ற எதன் உதவியையும் நாட வேண்டிய அவசியம் இல்லை என்றார் ஹாக்கிங்.

'தி கார்டியன்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் ஹாக்கிங் இப்படிச் சொன்னார், மனித மூளையைக் கணினியைப் போலவே நான் கருதுகிறேன். அதன் அங்கங்கள் எல்லாம் வேலையை நிறுத்திக் கொள்ளும் போது அதுவும் (மூளை) வேலையை நிறுத்திக்கொள்ளும். முற்றிலும் பழுதுபட்டு இயக்கம் நின்றுபோன கணினிக்கு சொர்க்கமோ அடுத்த பிறவியோ கிடையாது. சொர்க்கம், அடுத்த பிறவி என்ற கதையெல்லாம் இருட்டைப் பார்த்துப் பயப்படுபவர்களுடையது.

**எதைப் பற்றி நீங்கள் அதிகம் நினைத்துக் கொண்டிருப்பீர்கள்? என்று நியூ சயன்டிஸ்ட் இதழ் ஒருமுறை ஹாக்கிங்கிடம் கேட்டது. பெண்கள். அவர்கள்தான் எனக்குப் பெரிய புதிர்! என்று பதிலளித்தார் ஹாக்கிங்.**

தன் வாழ்நாளின் கணிசமான பகுதியைக் கருந்துளைகளையும் பிரபஞ்சப் பேரழிவையும் ஆராய்வதற்காகச் செலவிட்ட ஹாக்கிங்குக்கு இருட்டைப் பார்த்துப் பயம் கிடையாது. அவர் சொன்னார், கருந்துளைகள் என்ற பெயரை அவற்றுக்கு வைத்திருப்பதற்குக் காரணம், தாங்கள் அழிக்கப்படுவதைக் குறித்தும் ஏதோ ஒன்றால் தாங்கள் விழுங்கப்படுவது குறித்தும் மனிதர்கள் கொண்டிருக்கும் அச்சம்தான். கருந்துளைகளுக்குள் எறியப் படுவது குறித்து எனக்குப் பயமேதும் கிடையாது. அவற்றை நான் புரிந்துகொண்டிருக்கிறேன். ஒரு வகையில் அவற்றின் எஜமானனாக நான் என்னை உணர்கிறேன்!

**நன்றி - தி நியூயோர்க் டைம்ஸ்,**


©AP

## புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள் - 21 விடைகள் (பகுதி -II)

01. 1) ஏரிக்கரையில் இருந்த புதர்களில் / புதர்களில் 2) அடர்ந்த / அழகான 3) ஏரி
4) காடு 5) ஏரிக்கரை
6) வாத்து / காடு / வாய்க்காலில் / ஏரிக்கரை / ஏரி
02. 1) இரட்டைக்கிளவி 2) வெள்ளிவிழா 3) உலோபங் கூடாது.
03. 1) சகபாடி 2) பொதுநலவாதி
04. 1) கவிதா சந்தையில் மாம்பழம், வாழைப்பழம், தோடம்பழம் ஆகியன வாங்கினாள்.
2) “ஒழுக்கம் விழுப்பம் தரும்” என்பது வள்ளுவர் வாக்கு.
05. 1) வாய்மை 2) புனிதம் 3) ஆதவன்
06. 1) வீணாய்ப் போக்க மாட்டாராம் 2) பனைத் துணையாக் கொள்வர்
07. 1) Black Board 2) Radio
08. 1) what's your name? / What is your name?
09. 1) தயவுசெய்து உள்ளே வரவும் / வாருங்கள் 2) உட்காருங்கள் / இருங்கள்
10. 1) எனது வீட்டு முகவரி
11. 1) தும்ரிய ஸ்தானய
12. 1) பெரியவர் அருகில் சீடன் சென்றான் அல்லது சீடன் பெரியவர் அருகில் சென்றான்.
2) நகம் கடிப்பது தவறான பழக்கமாகும்.
13. 1) உயர்ந்தது 2) சென்றான் 3) பறந்தன
14. 1) மாநிலம் 2) இராச்சியம்
15. 1) நிறையச் சம்பாதித்தல் 2) போருக்கு அழைத்தல்
16. பொருத்தமான வாக்கியங்கள்
17. 1) 8 2) 700
18. 1) 14 2. 0.5
19. 1) 8596 2) 9900
20. 1) 16 2) 160
21. 12070
22. $\frac{2}{8}$ அல்லது $\frac{1}{4}$
23. 3km 200m
24. 4kg 275g
25. 6
26. 1. 115
2. திங்கள், புதன்
27. 200 ரூபா
28. 66
29. கனவுரு
30. 1. 360
2. 72
31. 14 : 40 மணித்தியாலங்கள் / 14 : 40 h

| | | | |
|---|---|---|---|
| 32. 4 | 41. 3 | 51. 3 | 61. 2 |
| 33. 2 | 42. 3 | 52. 3 | |
| 34. 3 | 43. 3 | 53. 3 | |
| 35. 2 | 44. 2 | 54. 1 | |
| 36. 2 | 45. 3 | 55. 2 | |
| 37. 2 | 46. 1 | 56. 3 | |
| 38. 1 | 47. 2 | 57. 2 | |
| 39. 3 | 48. 3 | 58. 3 | |
| 40. 1 | 49. 4 | 59. 1 | |
| | 50. 4 | 60. 3 | |





# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

வினாத்தாள் 22

பகுதி – I

தரம்-5

வினாத்தாள் 22 பகுதி I இன் தொடர்ச்சி...

**25) “விளையும் பயிரை முளையில் தெரியும்” என்பதன் கருத்து**

.................................................................................................

**26) கமலனும் நிசாமும் சிறுவயது முதல் ஒன்றாக வளர்ந்த நண்பர்கள். அண்மையில் வகுப்பிற்குப் புதிதாக வந்த நாதனுடன் நெருங்கிப் பழகி வந்தான். இந்நிலையை வெளிப்படுத்தும் கூற்றைத் தெரிவுசெய்க**

1. கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை
2. கடுகு சிறிதானாலும் காரம் பெரிது.
3. முன்னை வந்த செவியை விட பின்னர் வந்தகொம்பு பெரிது

27) கீழே தரப்பட்டுள்ள மூன்று படிமுறைகளின் கீழ் கட்டடம் ஒன்றைக் கட்ட தீர்மானிக்கப்பட்டது.

| படிமுறை | எடுக்கும் காலம் |
|---|---|
| 1 | 2 ஆண்டுகள் |
| 2 | படிமுறை 1 இன் 2 இன் இரண்டு மடங்கு |
| 3 | படிமுறை 1 இன் 2 இன் அரை மடங்கு |

**2004 ஆம் ஆண்டில் கட்டடம் கட்டத் தொடங்கப்பட்டது எனின் எந்த ஆண்டில் அது நிறைவடையும்?**

1)2010 2)2011 3)2012

28)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | 8 | 5 | 3 | 8 | 2 | 6 | 5 |
| 4 | 3 | 4 | 2 | 9 | 6 | 3 | 2 |

**இங்கு அதிக தடவைகள் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கம் எது?**

.................................................................................................

**29) வெற்றிடத்திற்கு பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து எழுதுக.**

We buy ...................... from the post office

(books , pencils , stamps , bags )

**கருத்தினை தமிழில் எழுதுக.**

30) Good morning ....................................................................................................

31) Please come here ......................................................................................

32) What is this?........................................................................................................

**33) அசுத்த நீரை பருகுவதால் ஏற்படக்கூடிய நோய்**

1)டெங்குகாய்ச்சல் 2)மலேரியா 3)யானைக்கால் 4)வாந்திபேதி

**34) விவசாயிகள் 'ஏர்' கொண்டு வயலை உழுதனர். இதில் ஏர் என்பது?**

1) மாடு 2) இயந்திரம் 3) கலப்பை 4) துடுப்பு

**35) எதிரி வாலை பிடிக்க முயலும் போது தனது வாலைப் பிய்த்துக் கொண்டு செல்வது**

1) உடும்பு 2) கபறகொயா 3) பல்லி 4) ஓணான்

**36) பின்வருவனற்றில் தேசிய அடையாளம் அல்லாதது**

1) நீலோற்பலம் 2) நிறைகலசம் 3) நாகமரம் 4) காட்டுக்கோழி

- **பின்வரும் நெய்யரியில் உள்ள தகவல்களை வாசிக்க.**

எழுத்துகளும் இலக்கங்களும் உள்ள நெய்யரி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| A | 3 | 3 | 2 | B | 6 | C | D |
| 4 | 1 | A | F | E | 4 | E | F |
| D | F | 3 | 4 | D | 7 | A | E |
| C | 4 | 5 | D | 1 | B | 4 | 1 |
| 3 | F | D | E | F | 1 | C | A |

37)இங்கு, Aஎழுத்துகள் 4 இருக்கும் எனின், நெய்யரியில் இருக்கும் இலக்கம் 6 ஐச் சுற்றி ஒரு வட்டம் வரைக. அவ்வாறு இல்லாவிட்டால் நெய்யரியில் இருக்கும் இலக்கம் 2 இன் கீழ் ஒருகோட்டினை வரைக

.............................................................................................................................................

38)இங்கு D,F ஆகிய எழுத்துகள் ஒவ்வொன்றும் 5 தடவை இருப்பின் நெய்யரியில் இருக்கும் இருக்கும் இலக்கம் 7 இன் கீழ் ஒரு கோட்டினை வரைக

.............................................................................................................................................






39)1,3,4 எனும் இலக்கங்கள் ஒவ்வொன்றும் 4 தடவை இருப்பின் இலக்கம் 5 ஐச் சுற்றிவட்டம் இடுக. அவ்வாறு இல்லாவிட்டால் 5 இன் மீது × ஐக் குறிக்க.

.............................................................................................................................................

40) காட்டப்பட்டுள்ள செவ்வக உருவில் செங்கோணமுள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?



.............................................................................................................

## புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள் - 21 விடைகள் (பகுதி -I)

| | | | |
|---|---|---|---|
| 1. 3 | 11. 2 | 21. 2 | 31. 3 |
| 2. 1 | 12. 3 | 22. 3 | 32. 1 |
| 3. 3 | 13. 3 | 23. 2 | 33. 3 |
| 4. 2 | 14. 2 | 24. 2 | 34. 3 |
| 5. 3 | 15. 3 | 25. 3 | 35. 2 |
| 6. 3 | 16. 2 | 26. 2 | 36. 2 |
| 7. 2 | 17. 2 | 27. 2 | 37. 2 |
| 8. 2 | 18. 2 | 28. 2 | 38. 1 |
| 9. 1 | 19. 2 | 29. 3 | 39. 1 |
| 10. 2 | 20. 1 | 30. 1 | 40. |

| | | |
|---|---|---|
| 1. பா | க் | 2. கு |
| ம் | | யி |
| 3. பு | ய | ல் |

# சிரியாவில் வான்வழி தாக்குதல்

## 17 பேர் சாவு; 50 பேர் படுகாயம்



பெய்ரூட், மார்ச் 21

சிரிய நாட்டின் அர்பின் பகுதியில் விமானப்படை தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் 17 பேர் கொல்லப்பட்டனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

சிரிய நாட்டில் 2011ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. பயங்கரவாதிகளை அழிக்கும் நடவடிக்கையில் இதுவரை அங்கு 3 லட்சத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். ஐ.எஸ். பயங்கரவாதிகளை அழிப்பதில் ரஷ்யாவும் இணைந்து செயற்படுகிறது. இதுபோன்ற தாக்குதல்களில் சில சமயம் அப்பாவி பொதுமக்களும் கொல்லப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், சிரியாவின் அர்பின் பகுதியில் உள்ள ஒரு பள்ளியை குறிவைத்து சில விமானங்கள் குண்டுவீசித் தாக்குதல் நடத்தின. இந்தத் தாக்குதலில் 2 பெண்கள், 15 குழந்தைகள் உட்பட 17 பேர் கொல்லப்பட்டனர் என சிரியாவில் செயற்பட்டு வரும் பிரிட்டனைச் சேர்ந்த மனித உரிமைகள் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்தத் தாக்குதலில் 50 பேர் படுகாயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தத் தாக்குதல் பற்றிச் சிரிய அரசு இதுவரை எந்த அறிவிப்பும் வெளியிடவில்லை.

## ரஷ்ய அதிபர் தேர்தலில் போலி வாக்குகள் பதிவு?

### வெளியான வீடியோவால் பரபரப்பு

ரஷ்யாவில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் வாக்குச்சாவடியில் பணியில் இருந்தவர்கள் போலி வாக்குகள் பதிவு செய்வது போன்று வெளியான வீடியோவால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

ரஷ்யாவின் அதிபரான விளாடிமிர் புடினின் பதவிக்காலம் முடிய உள்ள நிலையில் அடுத்த அதிபரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடைபெற்றது. மொத்தம் 96 ஆயிரம் வாக்குச் சாவடிகளில் வாக்குப் பதிவு நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் வாக்கு எண்ணிக்கை தொடங்கி படிப்படியாக முடிவுகள் வெளியாகின. ஆரம்பத்தில் இருந்தே அதிபர் புடின் பல்லாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை வகித்து வந்தார். இன்று 98 வீத வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்ட நிலையில் 76.67 வீத வாக்குகளுடன் விளாடிமிர் புடின் அபார வெற்றி பெற்றார்.

இந்த நிலையில், ரஷ்ய அதிபர் தேர்தலின்போது ஒரு வாக்குச்சாவடியில் பணியில் இருந்தவர்கள் போலி வாக்குகள் பதிவிடுகின்றமை போன்ற இணையத்தளத்தில் பதிவு செய்யப்பட்ட ஒரு வீடியோ வைரலாக பரவி வருகிறது. ஆனால் இந்த வீடியோ உண்மையானது தானா என்பது பற்றி இதுவரை எந்தத் தகவலும் வெளியாகவில்லை.

## போதை மருந்து விற்றால் மரண தண்டனை

### ட்ரம்ப் வலியுறுத்தல்



வொஷிங்டன், மார்ச் 21

அமெரிக்காவில் போதை மருந்து விற்பனை செய்வோருக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் என ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வலியுறுத்தினார்.

அமெரிக்காவில் 20 லட்சத்து 40 ஆயிரம் பேர் போதை மருந்துக்கு அடிமையாகியுள்ளனர். கடந்த 2016ஆம் ஆண்டில் போதை மருந்துக்கு அடிமையாகி 63 ஆயிரத்து 600 பேர் உயிரிழந்துள்ளனர் என அந்நாட்டின் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனவே, இதைத் தடுக்க போதை மருந்து விற்பனை செய்வோருக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் என ட்ரம்ப் வலியுறுத்தினார்.

அதற்காக சட்டதிருத்த நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும். அத்தகைய நடவடிக்கையில் நீதித்துறை தீவிரமாக உள்ளது. போதைப் பொருள் கடத்தல்காரர்கள் மீதான நடவடிக்கை எடுக்க கால நேரத்தை வீணாக்கமாட்டோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பாம்புகளுடன் காலத்தைக் கழித்தவரின் உயிரைக் காவு கொண்ட ராஜநாகம்

பாம்புகளை பிடித்து கொஞ்சி விளையாடுவது, முத்தமிடுவது என மக்களிடையே மிகவும் பிரபலமான கோலாலம்பூரைச் சேர்ந்த அபு ஜாரின் ஹூசைன் பாம்பு கடித்து மரணமடைந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மலேசியாவின் கோலாலம்பூர் நகரைச் சேர்ந்தவர் அப்ஜாரின் ஹூசைன் (வயது 33). தீயணைப்புத்துறை வீரரான இவர் பாம்புகளைப் பிடிப்பதில் வல்லவர். பிடிப்பதோடு மட்டுமில்லாமல், பாம்பிற்கு முத்தமிடுவது, அவற்றுடன் சகஜமாக பழகுவது, அவற்றுடனே தூங்குவது என அசாத்திய செயல்களை செய்வதில் வல்லவர். எவ்வளவு கொடிய விஷப் பாம்பாக இருந்தாலும், லாவகமாகப் பிடித்து அதை உயிரியல் பூங்காவில் கொண்டு விடும் பணியை அவர் செய்து வந்தார்.

இந்தநிலையில், கடந்த 4 நாள்களுக்கு முன்னர் கொடிய விஷம் உள்ள ராஜநாகம் ஒன்று குடியிருப்பு பகுதிக்குள் புகுந்தது. அதைப் பிடிக்க அபு முயற்சித்த போது அந்த பாம்பு அவரை கடித்தது. அதனால், அவரது உடல் முழுவதும் விஷம் ஏறியது. இதையடுத்து அவருக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால், சிகிச்சை பயனின்றி அவர் மரணமடைந்தார்.

ராஜநாக பாம்புகளுடன் கொஞ்சி விளையாடி பொழுதைக் கழித்து வந்த அபு, அதே ராஜநாகம் கடித்து மரணமடைந்த சம்பவம் அவரது உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அவரின் ரசிகர்கள் இடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



## 2014 இல் மாயமான மலேசிய விமானம் தொடர்பாக வெளியான புதிய தகவல்

2014ஆம் ஆண்டு 239 பேருடன் மாயமான மலேசிய விமானத்தை கூகுள் எர்த் மூலம் கண்டுபிடித்துள்ளோம் என ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த இயந்திரப் பொறியியலாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் இருந்து சீன தலைநகர் பீஜிங் நோக்கி, 227 பயணிகள், 12 சிப்பந்திகளுடன் மலேசிய ஏர்லைன்ஸ் விமானம் எம்.எச். 370, கடந்த 2014ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி புறப்பட்டுச் சென்றது. ஆனால் 2 மணி நேரத்தில் அந்த விமானம், ரேடாரில் இருந்து மாயமானது.

கோலாலம்பூரில் இருந்து 239 பேருடன் பெய்ஜிங் சென்றபோது மாயமான மலேசிய விமானம் எங்கே போனது, என்ன ஆனது என்பது தெரியவில்லை. விமானம் இந்திய பெருங்கடலில் விழுந்து விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்பட்டது. விமானத்தில் இருந்தவர்கள் அனைவரும் உயிரிழந்துவிட்டனர் என்றும் கூறப்பட்டது. இந்த விமானத்தை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று பின்னர் கைவிடப்பட்டது.




இந்த நிலையில், ஆஸ்திரேலியாவை சேர்ந்த 64 வயதாகும் பொறியியலாளர் பீட்டர் மக்மென் என்பவர் மலேசிய விமானத்தின் பாகங்களை கூகுள் எர்த் மூலம் கண்டுபிடித்து உள்ளேன் எனத் தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் கூறுகையில், விமானம் இருக்கும் இடம் மொரிஷியஸில் இருந்து 22.5 கிலோ மீற்றர் தொலைவில் 16 கிலோமீற்றர் தெற்கில் உள்ள ரவுண்ட் தீவை காட்டுகிறது. இந்தத் தீவில் இதுவரை விமானம் மாயமானது பற்றி தேடுதல் நடத்தப்படவில்லை. அத்தோடு, அமெரிக்க அதிகாரிகள் சரியான தேடுதல் வேட்டையை நடத்தவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## சீன ராணுவ அமைச்சராக வேய் பெங்கே நியமனம்



சீன புதிய இராணுவ அமைச்சராக வேய் பெங்கே நியமிக்கப்பட்டுள்ளார்.

சீனாவில் அடுத்த 5 ஆண்டுகளுக்கான புதிய அரசு தற்போது பதவியேற்று வருகிறது. இதில் புதிய இராணுவ அமைச்சராக முன்னாள் ஏவுகணைப்பிரிவு தளபதியும், அதிபர் ஜின்பிங்குக்கு மிகவும் நெருக்கமானவருமான வேய் பெங்கே (வயது 63) நேற்று அந்த நாட்டு நாடாளுமன்றத்தால் நியமிக்கப்பட்டார்.

சீனாவின் ஒன்றுபட்ட ஏவுகணைப்பிரிவின் கடைசித் தளபதியாக பணியாற்றிய இவர், ஏவுகணை தொழில்நுட்பங்களில் சிறந்து விளங்கியவர் ஆவார். இதனால் 'ஏவுகணை மனிதன்' என்றும் அழைக்கப்பட்டார்.

காலைக்கதிர் Kalaikkathir



# சசிகலா கணவர் நடராஜன் சென்னையில் காலமானார்

சென்னை, மார்ச் 21

நுரையீரல் தொற்று காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த சசிகலா கணவர் நடராஜன் நேற்று அதிகாலை காலமானார்.

சசிகலாவின் கணவர் நடராஜனுக்கு கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் உடல்நலக் குறைவு ஏற்பட்டது. அவரது சிறுநீரகம் மற்றும் கல்லீரல் பாதிக்கப்பட்டிருந்தன.

இதனால் உடல் உறுப்பு மாற்று சத்திரசிகிச்சை மூல மாக நடராஜனுக்கு மாற்று கல்லீரல், சிறுநீரகம் ஆகியவை பொருத்தப்பட்டன.

இந்த நிலையில், நடராஜனுக்கு கடந்த 17ஆம் திகதி இரவு திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டது. மூச்சுத் திணற லாலும் அவதிப்பட்டார்.

நடராஜனின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளது எனவும், அவருக்கு செயற்கைச் சுவாசம் பொருத்தப்பட்டு தீவிர கண்காணிப்பில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது என குளோபல் மருத்துவமனை அறிக்கை வெளியிட்டிருந்தது.

இந்த நிலையில், நெஞ்சுவலி காரணமாக நேற்று அதிகாலை 1.35 மணியளவில் அவர் மரணமடைந்தார்எனத்தெரிவிக்கப்படுகிறது.





## சசிகலாவுக்கு 15 நாள் பரோல்



உடல்நலக் குறைவால் காலமான கணவர் நடராஜன் இறுதிச் சடங்கில் பங்கேற்ப தற்காக சசிகலாவுக்கு பெங்க ளூர் சிறை நிர்வாகம் 15 நாள்கள் தற்காலிக விடுப்பு (பரோல்) வழங்கி உத்தரவிட் டுள்ளது.

வருமானத்துக்கு அதிகமாக சொத்துக் குவித்த வழக்கில் பெங்களூர் பரப்பன அக்ர ஹாரா சிறையில் 4 ஆண்டு காலம் தண்டனையை அனு பவித்து வருகிறார் சசிகலா.

இவருடைய கணவர் நடரா ஜனுக்கு கடந்த 17 ஆம் திகதி இரவு திடீரென நெஞ்சு வலி ஏற்பட்டது. மூச்சுத் திணறலாலும் அவதிப்பட் டார். தீவிர சிகிச்சை அளித்து வந்தநிலையில், சிகிச்சை பயனின்றி நடராஜன் நேற்று அதிகாலை சுமார் 1.30 மணியளவில் உயிரிழந்தார்.

இந்த நிலையில் தஞ்சை மாவட்டம் விளார் கிராமத் துக்கு நடராஜன் உடல் எடுத் துச் செல்லப்பட்டு இறுதிச் சடங்குகள் நடைபெறவுள் ளன .

விளாரில் நடைபெறும் இறுதிச் சடங்கில் சசிகலா பங்கேற்கிறார். இதற்காக நடராஜனின் இறப்பு சான்றி தழுடன் 15 நாள்கள் பரோல் கேட்டு விண்ணப்பிக்கப் பட்டது.

இதையடுத்து கணவர் நட ராஜனின் இறுதிச்சடங்கில் சசிகலா பங்கேற்பதற்காக 15 நாள்கள் பரோல் வழங்கி பெங்களூர் சிறை நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

# காவிரி மேலாண்மை சபை நிச்சயம் அமைக்கப்படும்

### அருண் ஜெட்லி, நிர்மலா சீதாராமன் உறுதி மொழி



காவிரி மேலாண்மை வாரி யம் நிச்சயம் அமைக்கப்படும் எனமத்தியநிதியமைச்சர்அருண் ஜெட்லி, பாதுகாப்பு அமைச்சர் நிர்மலா சீதாராமன் இருவரும் உறுதியளித்துள்ளனர்.

காவிரி நீர் பங்கீடு தொடர் பானமேல்முறையீட்டுவழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், தமிழகத்துக்கான தண்ணீரின் அளவை குறைத்து கடந்த மாதம் 16ஆம் திகதி தீர்ப்பு வழங்கியது.

அத்துடன், ஏற்கனவே நடு வர் மன்றம் வழங்கிய தீர்ப்பின் படி காவிரி மேலாண்மை சபை மற்றும் காவிரி ஒழுங்காற்று குழு ஆகியவற்றை 6 வாரங்க ளுக்குள் அமைக்க வேண்டும் என்றும் மத்திய அரசுக்கு உத் தரவிட்டது.

அதைத்தொடர்ந்து காவிரி மேலாண்மை சபையை உடன டியாக அமைக்க வேண்டும் என்று தமிழக அரசும், தமிழக அரசியல் கட்சிகளும் மத்திய அரசை வற்புறுத்தி வருகின் றன. ஆனால் காவிரி மேலாண்மை சபையை அமைக்க கர்நாடகம் கடும் எதிர்ப்புத்தெரிவித்துவருகிறது.

இந்த நிலையில், உச்ச நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் காவிரி மேலாண்மைவாரியம்அமைப் பது பற்றித் தமிழகம், கர்நாட கம், கேரளா, புதுச்சேரி ஆகிய 4 மாநிலங்களின் உயர் அதி காரிகளுடன்மத்தியஅரசுடில்லி யில் ஆலோசனை நடத்தியது. ஆனால் முடிவு எதுவும் எட்டப் படவில்லை.

இந்த நிலையில் இம்மாத இறுதிக்குள்காவிரிமேலாண்மை சபைநிச்சயம் அமைக்கப்படும் என மத்திய அமைச்சர்கள், அருண் ஜெட்லி, நிர்மலா சீதாராமன் நாடாளுமன்ற வளாகத்தில் அ.தி.மு.க எம்பிக் களிடம் உறுதி அளித்து உள்ள னர் என செய்தி வெளியாகி உள்ளது.

## ரஜனிகாந்த்,கமல்ஹாசன் பா.ஜ.கவின் தயாரிப்புகள்

### நாஞ்சில் சம்பத் தாக்கு



சென்னை, மார்ச் 21

கமல், ரஜனி இரண்டு பேரும் பாரதீய ஜனதாவின் இரு தயாரிப்புகள் என்று நாஞ்சில் சம்பத் குற்றம் சாட்டியுள்ளார்.

காவிரி பிரச்சினையில் காலதாமதம் ஆவதற்கு மத்திய அரசே காரணம். கர்நாடக தேர்தலை மனதில் வைத்து செயற்படுகிறார்கள். இந்த அரசு நிழல் அரசு. சட்ட மன்றத்தில் எதிர் கட்சிகளுக்கு உரிய நேரம் ஒதுக்க வேண்டும்.

அண்ணா, திராவிடத்தை அலட் சியப்படுத்தி விட்டதால் தினகரன் கூர் இல்லாத அம்பாகிவிட்டார். கமல், ரஜனி இருவரும் பாரதீய ஜனதாவின் இரு தயாரிப்புகள் என்று தெரிவித்துள்ளார்.

### ரத யாத்திரைக்கு எதிராக வீதி மறியல்:

# ஸ்டாலின் உள்ளிட்ட எம்.எல்.ஏக்கள் கைது

சென்னை,மார்ச் 21

சட்டசபையில் இருந்து வெளியேற்றப்பட்ட தி.மு.கவின் எம்.எல்.ஏக்கள் ரத யாத்திரைக்கு எதிராக திடீரென வீதி மறியலில் ஈடுபட்டமையால் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தி.மு.கழக எம்.எல்.ஏக்கள் கைது செய்யப்பட்டனர்.

ராமர் கோவில் கட்டுவதற்கு ஆதரவு திரட்டும் வகையில் நடத்தப்படும் ரத யாத்திரைக்கு தமிழகத்தில் தடை விதிக் கக் கோரி சட்டமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சி தலைவர் மு.க.ஸ்டாலின் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தார். இதற்கு பதிலளித்து முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி பேசி னார்.

ஆனால், முதலமைச்சரின் விளக்கத்தை ஏற்க மறுத்து தி.மு.கழக உறுப்பினர்கள் கடும் அமளியில் ஈடுபட்டனர். அவையை நடத்த முடியாத நிலை ஏற்பட்டதையடுத்து, அவர்கள் அனைவரையும் வெளியேற்றும்படி அவைக்காவலா களுக்கு சபாநாயகர் உத்தரவிட்டார். இதையடுத்து அனை வரும் சட்டசபையில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

வெளியேற்றப்பட்ட பிறகு சட்டமன்றத்திற்கு வெளியே சாலையில் அமர்ந்து தி.மு.கவின் எம்.எல்.ஏக்கள் அனைவரும் மறியலில் ஈடுபட்டனர். மு.க.ஸ்டாலின் தலைமையில் நடந்த இந்த போராட்டத்தின்போது, ரத யாத்திரைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், மாநில அரசுக்கு எதிராகவும் முழக் கங்கள் எழுப்பினர். இதனால் அங்கு போக்குவரத்து பாதிக் கப்பட்டது. இதையடுத்து ஸ்டாலின் உள்ளிட்ட அனைத்து தி.மு.கழக எம்.எல்.ஏக்களையும் பொலிஸார் கைது செய் தனர்.




# உலக வர்த்தக மாநாடு ஆரம்பமாகியது நேற்று

உலக வர்த்தக அமைப்பின் இரண்டு நாள் மாநாடு டில்லியில் நேற்று தொடங்கிய நிலையில், 7 நாடுகளில் வர்த்தக அமைச்சர்களும், 50 நாடு களின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

சர்வதேச மூலதன வணிகத்தை தாராளமயமாக்கி அதை மேற்பார்வை யிடும் நோக்குடன் தொடங்கப்பட்ட உலக வர்த்தக அமைப்பானது, பல் வேறு நாடுகளுக்கு இடையே உள்ள வணிகத்தை ஒழுங்குமுறைப்படுத்து கிறது. இந்த நிலையில், வணிக ஒப் பந்தங்களில் சுதந்திரமான மற்றும் வெளிப்படையான விவாதங்களை ஈடுபடுத்தும் வகையில் வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுக்கும் மாநாடு தலை நகர் டில்லியில் நேற்று ஆரம்பமாகியது.

இரண்டு நாள்கள் இந்த மாநாடு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




50 நாடுகள் பங்கேற்பு

## பயங்கரவாதச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

பிழையான இந்தச் சட்டத்தால் தமிழ் இளைஞர்கள் பலர் சிறையில் வாடுகின்றனர் என அவர் மேலும் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நீதித்துறை சட்ட ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கடந்த 2008ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்டு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்ட சச்சிதானந்தம் ஆனந்தசுதாகரன் என்ற அரசியல் கைதியின் மனைவி கடந்த வாரம் கிளிநொச்சியில் காலமானார். இதனையடுத்து அவரது பிள்ளைகள் நிர்க்கதியாகியுள்ளனர். குழந்தைகள் மீது பாசத்தை பொழியும் ஜனாதிபதி, இந்தச் சிறார்களின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு ஆனந்த சுதாகரனுக்குப்பொதுமன்னிப்பு வழங்கவேண்டும்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கிச் சர்வதேச நியமங்களுக்கு ஏற்ற வகையில் புதிய சட்டமொன்று கொண்டுவரப்படுமென ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கடந்த 2015ஆம் ஆண்டு இலங்கை அரசு வழங்கிய உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை.

இந்நிலையில், பயங்கரவாத தடைச்சட்டம் எப்போது நீக்கப்படும் என்பதை நீதியமைச்சு உடன் அறிவிக்க வேண்டும்? - என்றார். (ஐ)

## வீரவன்ஸவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிரதான நீதிவான் லால் ரணசிங்க பண்டார, இருவரையும் கைதுசெய்யுமாறு பிறப்பிக்கப்பட்டிருந்த பிடியாணையையும் மீளப்பெற்றுக்கொண்டார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் சையிட் ராட் அல்- ஹூசைனின் இலங்கைப் பயணத்தை எதிர்த்து, 2016ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி, கொழும்பு - 07, பௌத்தலோக மாவத்தையிலுள்ள ஐக்கிய நாடுகளின் அலுவலகத்துக்கு முன்னால், விமல்எம்.பி. உள்ளிட்ட குழுவினரால் போராட்டம் நடத்தப்பட்டது.

அனுமதியின்றி ஒலிபெருக்கியைப் பயன்படுத்தியதுடன், வாகன நெரிசலை உண்டாக்கி மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தினர் என்று கறுவாத்தோட்டம் பொலிஸாரால் இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

பின்னர், குற்றச்சாட்டுடன் சம்பந்தப்பட்ட, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ, ஜயந்த சமரவீர, வீரகுமார திஸாநாயக்க, பியசிறி விதானகே, றொஜர் செனவிரத்ன, மொஹமட் முஸம்மில், சமிந்த ஜயலால் ஆகியோர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த வழக்கு, கொழும்பு பிரதான நீதிவான் லால் ரணசிங்க பண்டார முன்னிலையில் நேற்றுமுன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இருவரும் ஆஜராகாமையால் அவர்களைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு பிடியாணை பிறப்பித்து நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

நேற்று இருவரும் ஆஜராகியிருந்த நிலையில், வழக்குத் தவணைகளுக்கு முறையாக ஆஜராகவேண்டும் என்று இருவரையும் எச்சரித்த நீதிவான், பிடியாணையை மீளப் பெற்றுக் கொள்வதாக அறிவித்ததுடன், வழக்கின் அடுத்த அமர்வுத் தினமாக ஜூன் மாதம் 12ஆம் திகதியை நிர்ணயித்தார். (ஐ)

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குறித்து, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் ராட் அல்ஹூசைன் இன்று சபையில் வாய்மொழி அறிக்கையைச் சமர்ப்பிக்கவுள்ளார். அதன் முற்கூட்டிய பிரதியை அவர் ஏற்கனவே வெளியிட்டிருந்தார்.

அதில், ஜெனீவாத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசு இழுத்தடிப்புச் செய்வதாகவும், இதனால், மாற்றுவழிகள் குறித்து பரிசீலிப்பதற்கு உறுப்பு நாடுகளுக்குப் பரிந்துரைப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை இலங்கை அரசுக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொடர்பில் அமெரிக்கா இறுக்கமானதொரு நிலைப்பாட்டை எடுக்கும் என்று அந்நாட்டு அதிகாரிகள் தன்னிடம் உறுதி அளித்துள்ளனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

தனது அமெரிக்கப் பயணம் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை தொடர்பான தனது அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் ராட் அல் ஹூசைன் இன்று ஜெனீவாவில் வெளியிடவிருக்கிறார். அந்த அறிக்கை இலங்கை அரசுக்கு கடும் அழுத்தத்தை வழங்குவதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்நிலையில் நேற்று முன்தினம் நாம் ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் ஹெலி ஹரியைச் சந்தித்துப் பேச்சு நடத்தினோம்.

ஐ.நா. தீர்மானத்தைச் செயற்படுத்துவதில் இலங்கை அரசு தொடர்ச்சியாக மெத்தனப் போக்கைக் கையாண்டு வருவதால் ஓர் உறுதியான முடிவு எடுக்க வேண்டும் என்று நாங்கள் அமெரிக்காவிடம் வலியுறுத்தினோம்.

ஐ.நா. தீர்மானத்தை இலங்கை செயற்படுத்தத் தவறினால் மாற்று வழிகளைக் கையாள்வது குறித்து அமெரிக்கா கவனம் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டோம். இதற்குப் பதிலளித்த அமெரிக்கத் தூதுவர், எமது கோரிக்கைகளை சாதகமாகப் பரிசீலிப்பதாக உறுதியளித்தார் என்றார்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், கனேடியத் தமிழ்க் காங்கிரஸ், அமெரிக்கத் தமிழர் செயலணி, உலகத் தமிழர் பேரவை ஆகியவற்றின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். (ஐ)

## சங்கானைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மன்றிடம் கோரினார்.

இந்த வழக்கின் தீர்ப்பு நாளை வியாழக்கிழமை வழங்கப்படும் என திகதியிட்ட யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், அன்று வரை எதிரிகள் மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

2010ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி சங்கானை, முருகமூர்த்தி வீதியில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த கொள்ளையர்கள் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு நகைகள் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பனவற்றைக் கொள்ளையிட்டனர். துப்பாக்கிச் சூட்டில் சிவானந்தக் குருக்கள் நித்தியானந்தக் குருக்கள் கொல்லப்பட்டார். அவரது மகன் கள் இருவரும் படுகாயமடைந்தனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், இராணுவப் புலனாய்வாளர்கள் என்று தெரிவிக்கப்பட்ட காசிநாதன் முகுந்தன் அல்லது சக்தி, பாலசுப்பிரமணிம் சிவரூபன் மற்றும் இராணுவச் சிப்பாய் பேதுறு குணசேன ஆகியோரைக் கைது செய்தனர்.

சம்பவம் தொடர்பில் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்ற சுருக்கமுறையற்ற விசாரணைகளின் பின்னர் வழக்கேடுகள் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டன.

வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்தமை, துப்பாக்கியைப் பயன்படுத்தியமை, குருக்களைக் கொலை செய்தமை மற்றும் மூவரைப் படுகாயப்படுத்தியமை ஆகிய 4 குற்றச்சாட்டுகளை முன்வைத்து எதிரிகள் மூவருக்கும் எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு யாழ்ப்பாண மேல்நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் இடம்பெற்று வந்தது. வழக்குத் தொடுநர் தரப்பு மற்றும் எதிரிகள் தரப்பு தொகுப்புரைகள் நேற்று இடம்பெற்றன.

வழக்குத் தொடுநர் தரப்பில் அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந்த் தொகுப்புரை வழங்கினார். அரசதரப்புச் சாட்சியங்கள் மற்றும் எதிரிகளிடம் முன்னெடுத்த குறுக்கு விசாரணைகளின் அடிப்படையில் அரச சட்டவாதி தனது தொகுப்புரையை முன்வைத்தார். 3 எதிரிகள் மீதான நான்கு குற்றச்சாட்டுக்களும் தம்மால் நிரூபிக்கப்பட்டுள்ளதாக எடுத்துரைத்த அரச சட்டவாதி, எதிரிகள் மூவருக்கும் தூக்குத்தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும் மன்றிடம் கோரினார்.

முதலிரண்டு எதிரிகள் சார்பில் சர்மினி விக்னேஸ்வரனும் மூன்றாவது எதிரியான இராணுவச் சிப்பாய் சார்பில் மன்றினால் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி ஜோய் மகிழ் மகாதேவாவும் முன்னிலையாகித் தமது தொகுப்புரைகளை முன்வைத்தனர். (ஐ)

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இல்லை எனத் தெரிவித்த கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், பிரதமர் ரணில் செய்வது நரி வேலை என்றும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் பதவிப் பிரமாண நிகழ்வு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நேற்று நடைபெற்றது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தின் பிரகாரம் கட்சியின் செயலாளருக்கு அதிக அதிகாரம் இருக்கிறது. அதாவது யாராவது உறுப்பினர் கட்சிக் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டுச் செயற்படுவதாகக் கருதினால் கட்சி அவரை நீக்குவதற்குச் சட்டம் இருக்கிறது. இதனை அனைவரும் நினைவில் வைத்திருங்கள்.

கடந்த தேர்தலில் நாங்கள் எல்லோரும் ஒரு கட்சிக்கு எதிராக அதனை நோக்கியே செயற்பட்டோம். அந்தக் கட்சியைத் தான் கருத்தில் எடுத்தோம். ஆனால் சுயேச்சை உட்பட 9 கட்சிகள் இங்கு போட்டியிட்டு இருந்தன. ஒரு கட்சி சாதி அமைப்பை முன்னிறுத்தி வாக்குகளை எடுத்துவிருக்கின்றது. அதற்கு நாங்கள் தீர்க்கமான பதிலைக் கொடுக்கவேண்டும். இப்போது நான் அந்தக் கட்சியின் பெயரைச் சொல்ல விரும்பவில்லை.

எங்களுக்குப் பக்கத்தில் இருப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கோ, சுதந்திரக் கட்சிக்கோ அருகதை இல்லை என்று தேர்தல் பிரசாரத்தின்போது மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றேன். நான் 1982 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக இங்கு தான் இருக்கின்றேன். வேறு எங்கும் நான் போகவில்லை. நடந்த ஒவ்வொன்றையும் அருகிலிருந்து பார்த்திருக்கின்றேன்.

நாங்கள் எங்களது வட்டாரங்கள் மட்டுமல்ல எங்களுக்குக் கிடைக்காத வட்டாரங்களையும் கூட கவனிக்கவேண்டும். அதற்கமைய அடிக்கடி அவர்களைச் சந்திக்க வேண்டும். தற்போது ஒரு கட்சியினர் மூளைச்சலவை செய்யத் தொடங்கிவிட்டார்கள். அவர்களை இந்தத் தேர்தலில் பார்ப்போமானால் கிட்டத்தட்ட 86 உறுப்பினர்களைத் தான் பெற்றிருக்கின்றனர். அதாவது மூன்றில் ஒன்று தான் பெற்றுள்ளனர். ஆனாலும் அது பரவாயில்லை.

ஐ.தே.க. 92 ஆசனங்கள் பெற்றதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஆசனங்கள் போயுள்ளன. ஜனாதிபதியும் பிரதமரும் வேலை செய்கின்றனர். இதில் பிரதமர் செய்யும் வேலை நரி வேலை என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். தேர்தல் கடைசி நிமிடத்தில் காசை அள்ளிக் கொட்டினார். அந்த விடயம் பின்னர் தான் எமக்குத் தெரிய வந்தது.

ஆகவே இது குறித்து ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் நேரடியாக கதைக்கவேண்டும். இந்த மாதிரியான வேலைகளைச் செய்வதாக இருந்தால் அதை ஏற்றுக்கொள்ளமுடியாது என்பதைத் தெளிவாகச் சொல்ல வேண்டும். தற்போது சில வேலைகளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொடங்கியிருக்கின்றதாக நான் அறிகின்றேன். இவற்றையெல்லாம் நடாளுமன்றக் கூட்டத்தில் சொல்லுவோம் - என்றார்.

## தனியார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கிரிபத் கொடையிலுள்ள தனியார் வங்கியொன்றிலேயே இந்தக் கொள்ளைச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது.

மோட்டார்சைக்கிளொன்றில் வந்த இனந் தெரியாதோர் கத்தியைக் காட்டி அலுவலர்களை அச்சுறுத்திவிட்டுத் தனியார் வங்கியில் கொள்ளையில் ஈடுபட்டுவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

வங்கியில் இருந்து 9 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணம் இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார். (ஐ)

## ஆனந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சிறிசேனவுக்கு கருணை மனு சமர்ப்பித்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஊடாக இந்தக் கருணை மனுவை அவர்கள் ஜனாதிபதிக்கு எழுதியுள்ளனர்.

சச்சிதானந்தன் ஆனந்தசுதாகர் 2008ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். அவருக்கு ஆயுள் தண்டனை வழங்கி மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதனடிப்படையில் அவர் மகஸின் சிறைச்சாலையில் தண்டனையை அனுபவித்து வருகிறார்.

ஆனந்தசுதாகரின் மனைவி யோகராணி நோய்வாய்ப்பட்ட நிலையில் கடந்த வாரம் உயிரிழந்தார். மனைவியின் இறுதிக் கிரியைகளுக்காக ஆனந்த சுதாகர் கடந்த ஞாயிற்றுக் கிழமை கிளிநொச்சியிலுள்ள அவரது வீட்டுக்கு அழைத்துவரப்பட்டார்.

மகஸின் சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் பாதுகாப்புடன் அழைத்துவரப்பட்ட அவர் 3 மணிநேரங்களில் மீள அழைத்துச் செல்லப்பட்டார்.

தனது பிள்ளைகள் குழந்தைகளாக இருந்தவேளை ஆனந்த சுதாகர் அரசியல் கைதியாகத் தடுப்பில் வைக்கப்பட்டார். அதனால் தந்தையின் அரவணைப்பை நாடிய அவரது மகள் அவரைப் பிரிய விரும்பவில்லை.

அதனால் அந்தச் சிறுமியின் தந்தையுடன் சிறைச்சாலைக்குச் செல்ல முற்பட்டாள். அந்த நெகிழ்ச்சியான சம்பவத்தை நேரில் கண்டவர்களுக்குக் கண்கள் இரண்டிலும் கண்ணீர் பெருக்கெடுத்தது.

இந்த நிலையில் தாயை இழந்து பெற்றோரின் ஆதரவின்றித் தவிக்கும் ஆனந்த சுதாகரின் மகனும் மகளும் தந்தைக்குப் பொது மன்னிப்பு வழங்கவேண்டும் என ஜனாதிபதியிடம் கருணை மனு முன் வைத்துள்ளனர்.

தென்னிலங்கையில் சிறுவர்களின் கோரிக்கைகளை அடுத்த கணமே நிறைவேற்றும் மைத்திரிபால சிறிசேன, இந்தச் சிறுவர்களின் ஏக்கங்களுக்குச் செவிசாய்ப்பாரா? என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாக வுள்ளது. (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir



## கட்சியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவியேற்பு நிகழ்வு நேற்று நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நடந்தது. இங்கு உரையாற்றிய தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவர் த. சித்தார்த்தன் ஆகியோரே தமது உரைகளில் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தனர்.

இங்கு உரையாற்றிய தமிழரசுக்கட்சியின்தலைவர்மாவை சேனாதிராசா தெரிவித்தவை வருமாறு:-

எமது மக்களுக்காக எங்கள் உறுப்பினர்கள்ஒவ்வொருவரும் மிகுந்தஒழுக்கக்கட்டப்பாட்டுடன் கட்சி வழிகாட்டலில் ஒன்றுபட்டு ஒற்றுமையாகக் கட்சி எடுக்கும் தீர்மானத்தின் பிரகாரம் செயற்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். இருந்தும் கட்சித் தீர்மானங்களை மீறி அல்லது பிரிந்து நின்று செயற்பட்டுக் கட்சிக்கு வீணான நெருக்கடிகளை ஏற்படுத்தி உங்களுக்கு எதிராகக் கட்சியை நடவடிக்கை எடுக்க வைக்கவேண்டாம்.

ஏனெனில் கடந்த காலங்களில் உள்ளூராட்சி மன்றங்களில் கூட்டமைப்பின் வரவு – செலவுத் திட்டங்கள் கூட்டமைப்பின் உறுப்பினர்களாலே தோற்கடிக்கப்பட்டன. அந்த நிலைமைகள் மீள ஏற்படுவதற்கு இடமளிக்கக்கூடாது. அவ்வாறு கட்சித் தீர்மானம் அல்லது ஒற்றுமையைச் சீர்குலைத்துச் செயற்படுகின்ற போது கட்சி நடவடிக்கை எடுக்கின்ற அதேவேளை, வேறு தரப்பினர்களுக்கு அது வாய்ப்பாக அமைந்துவிடுமென்பதையும் புரிந்துகொள்ளவேண்டும்.

ஆயினும், எமது கட்சியின் உறுப்பினர்கள் கட்சி எடுத்த தீர்மானங்களைமீறிச்செயற்படமாட்டார்கள் என்று நாங்கள் நம்புகின்றோம். ஆகவே தன்னிச்சையான சுயநல எண்ணங்கள் எந்த ஒரு உறுப்பினருக்கும் இருக்காமல் சகலரும் ஒரே கட்சியாக ஒன்று கூடி ஒற்றுமையாகச் செயற்படவேண்டிய கடப்பாடு ஒவ்வொருவருக்கும் இருக்கிறது.

எனினும் இதனை எச்சரிக்கையாக எடுக்கத் தேவையில்லை. மக்கள் நலன் சார்ந்தே எடுத்துக் கொள்ளவேண்டும்.

தலைமைத்துவ வழிகாட்டுதல்கள் என்றும் உங்களுக்கு இருக்கும். கட்சிகள் மற்றும் உறுப்பினர்களுக்கிடையில் இணக்கம் காணப்பட்டது போன்றே கட்சித் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் வகையில் ஒவ்வொரு உறுப்பினர்களும் தமது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, சாவகச்சேரி,பருத்தித்துறை ஆகிய இடங்களின் சில உள்ளூராட்சிச் சபைகளில் தலைமைத்துவத்தைக் கோருவதற்கு எங்களுக்கு உறுப்பினர்கள் போதாமல் இருக்கின்றது. இதனால் அந்த இடங்களில் என்ன செய்வதென்பது குறித்து தந்திரோபாயநடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறைமையில் பாதிப்புக்கள் இருக்கின்ற போதிலும், இந்தத் தேர்தலில் வடக்கு – கிழக்கில் கூட்டமைப்பு 40 இடங்களில் பெரும்பான்மையைப் பெற்றுக் கொண்டுள்ளது. ஆயினும் இன்னொருமுறை இந்தப் பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் திருத்தங்கள் கொண்டுவரப்படுமென நான் கருதுகிறேன். இந்தத் தேர்தல் பாடம் சகலருக்கும் படிப்பினையாக அமைந்திருக்கின்றது.

இந்தத் தேர்தல் முறைமையால் பல இடங்களில் எந்தக் கட்சிக்கும்தனித்துஆட்சியமைக்கும் அறுதிப் பெரும்பான்மை இல்லாததால் தற்போது ஆட்சியமைப்பதில் நெருக்கடிகளும் ஏற்பட்டிருக்கின்றன. அதனால் சபைகளை நல்லிணக்கத்துடன் நடத்தவேண்டிய பொறுப்பு இருக்கின்றது. இதில் விருப்பு வெறுப்புகளுக்கு இடமில்லை.

இங்கு கூட்டமைப்பு 40 சபைகளில் பெரும்பான்மையாக இருக்கின்ற நிலையில் அந்தந்தச் சபைகளில் ஆட்சியமைப்பதற்கு எங்களுக்கு உரித்திருக்கின்றது. எங்களுக்கு எதிரிலோ அல்லது சார்பாகவோ இருக்கின்றவர்களின் நல்லெண்ணெத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். மேலும் இதனைத் தந்திரோபாயமாக அணுகிச் செயற்பட வேண்டியதும் அவசியம். ஆகவே அதனைக் கட்சித் தலைமைகள் பார்த்துக் கொள்ளும்.

எமது தேசம் போரால் அழிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் அதனை மீளக் கட்டியெழுப்புவதற்கு உள்ளூராட்சி மன்றங்களுக்குப் பாரிய பொறுப்பு இருக்கிறது. ஆகவே அதற்கான திட்டங்களைத்தீட்டிசெயற்படுத்த வேண்டும். அதற்கமைய வரவு – செலவுத் திட்டங்களை தயாரித்துச் செயற்படவேண்டியது அவசியம். உள்ளூராட்சி மன்றங்களிலிலே வரவு – செலவுத் திட்டங்களைச் சரியான முறையில் தயார்படுத்தி அதற்குச் சகலரையும் இணைத்துக் கொண்டு ஒற்றுமையாக இணைந்து பயணிக்கவேண்டும்.

எமது மக்களின் அபிவிருத்திக்காகவும் உரிமைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவும் நாங்கள் ஜனநாயக ரீதியாகப் பெற்ற பலத்தை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பாக இந்தத் தேர்தலில் எமக்கான வாக்கு வீதம் ஏன் குறைந்தது என்பது தொடர்பில் நாம் ஆராயந்து அதற்கான காரணங்களையும் அறிந்துள்ளோம். இதற்காக யாரையும் குறை சொல்லிப் பழி சுமத்தி எதிர்காலத்தைக் கொண்டு செல்ல வேண்டிய அவசியமில்லை. ஆகவே இவற்றை நிவர்த்தி செய்து கொண்டு அதற்கான அடித்தளத்தைச் சிறந்த முறையில் அமைத்துக் கொண்டு எமது மக்களின் விடிவுக்காகவும் விடுதலைக்காகவும் பயணிப்பதற்கு தீர்மானித்திருக்கின்றோம். – என்றார்.

**சித்தார்த்தன்**

இங்கு உரையாற்றிய புளொட் தலைவர் சித்தார்த்தன் தெரிவிக்கையில் –

கடந்தஉள்ளூராட்சிச்சபைத் தேர்தலானது போட்டி மிகுந்த – விமரச்னங்கள் வைக்கப்பட்ட தேர்தலாக இருந்திருக்கிறது. அந்தத் தேர்தலில் மிகக் கூடுதலான உழைப்பைக் கொடுத்து நீங்கள் வெற்றி பெற்றிருக்கின்றீர்கள் அதற்கு என்னுடைய பாராட்டையும் வாழ்த்தையும் தெரிவித்தக் கொள்கிறேன்.

கூட்டமைப்பு வடக்கு – கிழக்கில் இரண்டு சபைகளைத் தவிர மற்ற சபைகளில் தனிப் பெரும்பான்மையைப் பெற்றுள்ளது. ஆனால் அறுதிப் பெரும்பான்மையைப்பெறவில்லை. ஆகவே எங்கள் சபை நடவடிக்கைகளில் எங்கள் அங்கத்தவர்கள் எங்களுக்குள் இருக்கக் கூடிய ஒற்றுமையைப் பேணிப் பாதுகாக்கவேண்டும்.

அவ்வாறு கூட்டமைப்பு அங்கத்தவர்களுக் கிடையிலான ஒற்றுமையைப் பேணிப் பாதுகாப்பதன் மூலம்தான் சபைகளை வினைத்திறன் கொண்ட சபைகளாக நடத்த முடியும். எங்கள் ஒற்றுமை மூலம் எங்களுக்கு மாற்றாகத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று வந்திருக்கின்ற அங்கத்தவர்கள் கூடச் சபைகளைக் குழப்புகின்ற நடவடிக்கைகளை எடுக்காமல் செய்யமுடியும்.

அவ்வாறு அவர்கள் குழப்புகின்ற நடவடிக்கைகளை எடுக்கிறார்களோ அல்லது எடுப்பார்களோ என்று நான் கூற வரவில்லை. ஆனால் எப்படியும் அவர்கள் கூட்டமைப்புக்கு ஆதரவாக இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. அதனடிப்படையில் நீங்கள் ஒவ்வொருவரும் ஒற்றுமையைப் பேணிப் பாதுகாத்துக் கூட்டமைப்பின் சபைகள் அனைத்தும் வினைத்திறனுடன் நடக்கின்றதென்பது வெளி வரவேண்டும்.

கூட்டமைப்பினரின்சபைகள் கௌரவமாகவும் மற்றக் கட்சிகளுடன் பண்பாகவும் நடக்கின்றன என்பதுடன் மக்களுக்குச் மிகச் சிறந்த சேவைகளைக் கொடுக்கின்றன என்ற செய்தி வெளியில் வந்தால் தான் கூட்டமைப்பு இந்தத் தேர்த லில் அடைந்திருக்கின்ற பின்னடைவுகளை நாங்கள் ஓரளவுக்காவது மீண்டும் சரி செய்ய முடியும்.

இந்தத் தேர்தலின் பின்னர் கூட்டமைப்புக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவு என்பது ஒரு தற்காலிகமான விடயமாகவே நான் பார்க்கின்றேன். மக்கள் தாங்களாகவே மீண்டும் எம் பக்கம் வருவார்கள் என்ற எதிர்பார்ப்பைக் காட்டிலும் எங்கள் மக்களுடன் நாங்கள் இருக்கின்றோம் என்பதை வெளிப்படுத்தும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும்.

ஏனென்றால் நீங்கள் தான் மக்களின் அடி மட்டத்தில் பழகுகின்ற கூட்டமைப்பின் உறுப்பினர்களாக இருப்பவர்கள். நாங்கள் நாடாளுமன்றத்தில் இருந்தாலும்நீங்கள்ஒவ்வொரு வட்டாரத்திலும் அந்த மக்களுடன் நெருக்கமாகப் பழகுகின்ற வாய்ப்பை பெற்றவர்கள். ஆகவே உங்களின் மூலம் தான்உங்கள்செயற்பாட்டையும் கூட்டமைப்பையும் மக்கள் பார்க்கின்றார்கள்.

ஆகவே நீங்கள் திறமையாக – ஒற்றுமையாகச்செயற்பட்டுச் சபைகளை திறமையாகவும் சீராகவும் நடத்திக் கூட்டமைப்பு மீண்டும் ஒரு பலமான அமைப்பாக – தமிழ்மக்களின்விடுதலை இயக்கமாக மிளிர்வதற்கு அனைவரும் இணைந்து உழைக்கவேண்டும். – என்றார்.

**செல்வம் அடைக்கலநாதன்**

இங்கு உரையாற்றிய ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவிக்கையில்,

நடைபெற்ற உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினூடாகப் போட்டியிடுவதற்குக்கூடுதலான மக்கள் படையெடுத்து வந்திருந்தனர். ஆனால் சகலருக்கும் அந்த வாய்ப்பு கொடுக்கப்படாத நிலையில் வேறு வேறு கட்சிகளுக்குப் பலரும் சென்றிருக்கின்றனர். எங்களைச் சுற்றி அதாவது கூட்டமைப்பை நசுக்க வேண்டும் – பலவீனப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு தான் தமிழ்க் கட்சிகளாக இருக்கலாம் பெரும்பான்மை சிங்களக் கட்சிகளாக இருக்கலாம் எல்லோரும் பரப்புரைகளைச் செய்தார்கள்.

அதைவிட மக்கள் மத்தியில் செல்கின்றபோது நிறைய வசைகளையும் பேச்சுக்களையும் தாங்கிக் கொண்டு இன்றைக்கும் மக்கள் எங்களோடு தான் இருக்கின்றார்கள் என்பதைத் தூக்கி நிறுத்திய பெருமை உங்களைச் சாரும். அந்த வகையில் நீங்கள் இவ்வாறு பல கஸ்டங்கள், பாதிப்புகளுக்கு மத்தியில் உழைத்திருக்கின்றமைக்கு பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இதேபோன்று உங்களோடு போட்டியிட்டவர்களும் பட்டியல் அங்கத்தவர்களும் முழுமூச்சாக உழைத்ததால் வடக்கு – கிழக்கில் பல இடங்களில் கூட்டமைப்பு சபைகளைப் பிடித்திருக்கின்றது. ஆனால் கூட்டமைப்பு வீழ்ச்சி கண்டிருக்கின்றதை நாங்கள் ஒத்துக் கொள்ள வேண்டும். அதை நாங்கள் ஒரு பாடமாகப் பார்க்கவேண்டும்.

இங்கு நாங்கள் பல சபைகளைப் பிடித்திருக்கின்றோம். அங்கெல்லாம் பல வேலைகளைச் செய்ய வேண்டியிருக்கின்றது. அதனையெல்லாம் பட்டியலிட்டுக் கலந்து பேசிச் செய்யவேண்டும்.

அதே நேரம் ஆட்சியமைப்பதிலே பல சிக்கல்களும் இருக்கின்றன. அதாவது நாங்கள் பிரிந்து நின்ற காரணத்தால் அதாவது தமிழ்க் கட்சிகள் பிரிந்து தமிழ் மக்களின் வாக்குகளைப் பிரிக்கின்றபோது சிங்களக் கட்சிகளுக்கு அந்த வாக்குகள் சென்றிருக்கின்றன.

நாங்கள் பிரிந்து நின்றதால் சிங்களக் கட்சிகளில் யானை, கை, மொட்டு என்பன உள்ளே புகுந்து அதிகளவான ஆசனங்களைப் பெற்றிருக்கின்றன.

தேர்தல் பிரசாரத்தில் மாறி மாறிப் பேசிய தமிழ்க் கட்கள் தாம் கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்கமாட்டோம் என்று மீண்டும் மீண்டும் சொல்கின்றன. ஆகவே அதனை ஆனந்தசங்கரி ஐயா மீள் பரிசீலனை செய்யவேண்டுமென்று மீள நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம். இது எங்களுடைய மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற சபை. இதிலே கொள்கை பார்க்க முடியாது. ஆகவே இதிலே நாங்கள் எல்லோரும் சேர்ந்து ஆட்சிமைக்கவில்லை என்றால் யானை, கை,மொட்டு என்பன சேர்ந்து எங்கள் தமிழ் பிரதேசங்களில் ஆட்சியமைக்கின்றஅபாயநிலைஏற்படுகின்ற சூழல் இருக்கின்றது.

ஆகவே எங்கள் மக்களின் நல்வாழ்விற்காக இந்த முரண்பாடுகளை எல்லாம் விட்டுவிட்டுச் சபைகளை நடத்துவதற்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்பது எங்கள் வேண்டுகோள். இதிலே நாங்கள் முரண்டுபட்டோமானால் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சேவைகளை வழங்க முடியாத நிலை வரும். சிங்களக் கட்சிகள் ஆட்சிமைக்கின்ற சந்தர்ப்பத்தை உருவாக்கிவிட்டோமேயானால் அடுத்த அடுத்த தேர்தல்களிலே தமிழர்களாகிய நாங்கள் எந்தப் பிரதிநிதித்துவத்தையும் பெற முடியாதஅபாயநிலைஏற்படும். ஆகவே அதற்கான எந்தச் சந்தர்ப்பத்தையும்யாரும்கொடுக்க கூடாது.

கடந்த முறை உள்ளூராட்சிச் சபைகளில் எங்களுடைய சபைகளை எங்கள் உறுப்பினர்களே குழப்பிய நிலையில் இந்த முறை அவ்வாறான செயற்பாடுகள் தொடரக் கூடாது. இந்த தேர்தல் முறையானது கட்சியின் செயலாளருக்கு அதிகாரத்தைக் கொடுத்திருக்கின்றது. அதாவது கட்சிச் செயலாளர் யாரை நீக்க வேண்டுமெனத் தீர்மானம் எடுக்கின்றாரோ அவர் உடனடியாக நீக்கப்படுவார். அதற்கு நாள்கள் தேவையில்லை. ஆகவேகூட்டமைப்புஎடுக்கின்ற முடிவுகளுக்குச் சகல உறுப்பினர்களும் கட்டுப்பட வேண்டும்.

குறிப்பாக வேறு ஒரு கட்சியில் இருந்து தவிசாளராக உங்கள் பெயர் சிபார்சு செய்யப்பட்டால் அதனூடாகத் தவிசாளராகலாம் என்று கருதி நீங்களும் அதற்கு உடன்பட்டுக் கனவுகாணவேண்டாம். அந்தக் கனவு அடுத்த நிமிடமே கானல் நீராகிப் போய்விடும். ஆகவே ஒருவர் சொல்கின்றார் என்றால் அதனை நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொல்லுங்கள். அடுத்ததாக எங்களுக்குள் முரண்பாடு இருக்கிறது. கட்சி ஒரு முடிவை எடுத்திருக்கின்றபோது மற்றவர்களுடன் பேசுகின்ற நிலை தொடரக் கூடாது.

இந்த முறையில் கட்சிச் செயலாளருக்கு அதிகாரம் இருக்கிறது. அந்த அதிகாரம் என்பது ஒருவரை எப்போதும் நீக்க முடியுமென்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும். இவற்றையெல்லாம் தெரிந்தும் அறிந்தும் கட்சிக் கட்டுப்பாடுகளுக்கமைய கட்சித் தீர்மானத்தின் அடிப்படையில் அனைவரும் செயற்பட வேண்டும். – என்றார். (ஐ –7)

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்கள் கட்சித் தலைவர்கள் முன்னிலையில் நேற்று செவ்வாய்க்கிமை பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

வடக்கு மாகாண அவைத் தலைவரும், தமிழரசுக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளருமான சி.வீ.கே.சிவஞானம் தலைமையில் பதவிப் பிரமாண நிகழ்வுநல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

கூட்டமைப்பின் நாடாளுமன்றஉறுப்பினர்களானமாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன், செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் மாகாண சபையின் உறுப்பினர்கள் ஆகியோர் முன்னிலையில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர். (ஐ –7)

## ஐ.நா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் விவகாரங்களுக்கான செயலர் ஜெப்றி பெல்ட்மனைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்தச் சந்திப்பு நியூயோர்க்கில் இடம்பெற்றுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் அண்மையில் அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொண்டார்.

ஜெனீவாத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மாற்றுவழிகளை முன்னெடுக்குமாறு அமெரிக்காவிடம் வலியுறுத்துவதற்காக அவர் இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

இந்நிலையில், ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்கான செயலர் ஜெப்றி பெல்ட்மனை, நாடாளுமன்ற சுமந்திரன் சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் உலகத் தமிழர் பேரவையின் தலைவர் வண. பிதா எஸ்.ஜே. இம்மானுவேல் அடிகளாரும் கலந்து கொண்டார் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ)

# தமிழருக்குப் பிரதியுபகாரங்களை செய்யவேயில்லை மைத்திரிபால

## ஐங்கரநேசன் காட்டம்



செய்ந் நன்றியை மறக்கவில்லைஎன்றுசொல்லும்ஜனாதிபதி அதற்கான பிரதியுபகாரங்களை இதுவரை செய்யவேயில்லை,தமிழ்மக்கள்தனக்குச்செய்த நன்றியை ஒருபோதும் மறக்கவில்லை என்றும் அதன் காரணமாகவே தமிழர் பிரதேசங்களில் நிகழும் நிகழ்ச்சிகளில் தவறாது கலந்து கொள்கிறார் என நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது உரையின்போது தெரிவித்திருக்கிறார். ஆனால்,தமிழ் மக்களின் செய்ந் நன்றியை மறக்கவில்லை என்று சொல்லும் ஜனாதிபதி அதற்கான பிரதியுபகாரமாக எதையும் இதுவரையில் தமிழ் மக்களுக்குச் செய்யவேயில்லை. அவரது வருகை மட்டுமே பிரதியுபகாரங்களாக அமையாது என் பதை அவர் கவனத்திற்கொள்ள வேண்டும் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் முன்னாள் விவசாய அமைச்சருமான பொ.ஐங்கரநேசன் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் கருத்துத் தொடர்பாக ஊடகங்களுக்கு பொ.ஐங்கரநேசன் அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தஅறிக்கையில் –

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த போது ஆற்றிய உரையில், தமிழ் மக்கள் தனக்குச் செய்த நன்றியை ஒரு போதும் மறக்கவில்லை என்றும் அதன் காரணமாகவே தமிழர் பிரதேசங்களில் நிகழுகின்ற நிகழ்ச்சிகளில் தவறாது கலந்து கொள்கிறார் எனத் தெரிவித்துள்ளார். தமிழ் மக்களுக்கு அவர் நன்றி சொல்வது இதுதான் முதற்தடவையல்ல. தமிழ் மக்களின் வாக்குகளாலேயே தான் அரியணை ஏறியமையைத் தமிழர் தாயகங்களுக்கு வருகை தருகின்ற போதெல்லாம் மறக்காமல் நினைவு கூர்ந்தே செல்கின்றார். ஆனால், தமிழ்மக்களின் செய்ந்நன்றியை மறக்கவில்லைஎன்றுசொல்லும் ஜனாதிபதி அதற்கான பிரதியுபகாரமாக இதுவரையில் தமிழ் மக்களுக்கு எதையும் செய்யவேயில்லை. அவரதுவருகை மட்டுமே பிரதியுபகாரமாக அமையாது என்பதை அவர் கவனத்தில் கொள்ள வேண் டும்.

காணாமல் ஆக்கப்பட்டோரைக் கண்டறியவேண்டியும்,அரசியல் கைதிகளின் விடுதலையை அவாவியும்,ஏதிலிகளாக அல்லலுற்று அலையும் எம்மக்கள் தம் சொந்தஇடங்களில் குடியேற விரும்பியும், தங்களுக்கான நிரந்தரஅரசியல் தீர்வைக்கோரியுமேஒரு மாற்றத்துக்காகமைத்திரிபால சிறிசேனவுக்கு தமிழ் மக்கள் வாக்களித்தார்கள். ஆனால், இவற்றுக்கெல்லாம் ஜனாதிபதி அவர்கள் இது வரையில் காத்திரமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்காமல் தமிழ் மக்களின் மனங்களைப் புண்படுத்தும் பதில்களையே தொடர்ந்தும் வெளிப்படுத்திவருகிறார். காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரங்களைக் கையாள்வதற்கென்று குழுவொன்றை அமைத்து விட்டதால் அதுதொடர்பாகத்தான் இனிமேல் சொல்வதற்கு எதுவும் இல்லைஎன்றும் யாழ்ப்பாண வருகையின்போது பதிலுரைத்துச் சென்றுள்ளார். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அவரின் வருகையை ஒட்டி கவன வீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்திக் கொண்டிருந்தபோதே அம் மக்களின் உணர்வு நிலையை உதாசீனம் செய்து இவ்வாறு மொழிந்து சென்றிருக்கிறார்.


போர்நடந்தபோது அன்றைய அமைச்சரவையில் ஒருவராக இருந்தவரும்,முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ வெளிநாடு சென்றிருந்தபோது பதில் பாதுகாப்பு அமைச்சராக இறுதி யுத்தத்தை நடத்திச் சென்ற வரும் என்றவகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் பதில் சொல்ல வேண்டிய கட்டாய கடப்பாட்டைக் கொண்டவராவார். காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகள் தங்களதுபிள்ளைகள் புகைப்படம் ஒன்றில் ஜனாதிபதியின் அருகில் நிற்கின்றமை குறித்து அடையாளம் காட்டிய பின்னரும் ஜனாதிபதி இப்பிரச்சினையைக் குழு விடம் கையளித்துத்தான் தப்பிக்க முயற்சிப்பதைத் தமிழ்மக்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

மக்கள் விடுதலைமுன்னணியின் கிளர்ச்சியாளர்கள் அனைவருக்கும் பொதுமன்னிப்புவழங்கி விடுதலை செய்த அரசாங்கம்தமிழ் அரசியல்கைதிகளை மட்டும் தொடர்ந்தும் சிறையில் வாட்டிவருகிறது. நல்லாட்சி அரசாங்கத்துக்குத்தமிழ் மக்கள் நம்பி வாக்களித்ததன் பின்னருங்கூட அரசாங்கம் இவர்களின் விடுதலையில் எவ்வித அக்கறையையும் காட்டவில்லை. இவர்களது குடும்பங்கள் அனுபவித்து வரும் துயரங்கள் சொல்லிமாளாதவை. தாயின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள வருகை தந்த அரசியல் கைதியான தனது தந்தையுடன் செல்வதற்காகக் பொலிஸ் வாகனத்தில் பிஞ்சுப் பாலகி ஏறியகாட்சியைப் பார்த்து பொலிஸார் கண்ணீர் உதிர்த்திருக்கின்றனர். ஆனால் இதுவரையில் சிறைக் கொட்டடியில் வாடும் அரசியல்கைதிகளின் குடும்பங்கள் அனுபவித்து வரும் இன்னோரன்னபிரச்சினைகள்குறித்து ஜனாதிபதி கவனம் கொள்ளாதவராகவே இருந்து வருகிறார்.

ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன அவர்கள் வார்த்தைகளால் நன்றிசொல்வதை விடுத்து அந் நன்றியைசெயல்களில் காட்ட வேண்டும் என்பதே போரால் பாதிக்கப்பட்டதமிழ் மக்களின் எதிர்பார்ப்பு. தவறின் செய்ந் நன்றிகொன்றவராகவே வரலாற்றில் இந்த ஜனாதிபதியும் இடம்பெறுவார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ)

# வாழைத்தோட்டத்தில் புதைக்கப்பட்டிருந்த முண்டம் மீட்பு!



கூரிய ஆயுதத்தால் வெட்டிக்கொலை செய்யப்பட்ட நிலையில் கொழும்பு - வாழைத்தோட்டப் பகுதியில் கைவிடப்பட்டிருந்த கொஸ் மல்லி எனும் பாதாள உலக உறுப்பினின் தலைக்குரிய முண்டமாக கருதப்படும் மனித முண்டம் அங்குனுகொலபெலஸ்ஸ - முரவெசிஹேன, கோத்தாபயகமவில் உள்ள வாழைத்தோட்டம் ஒன்றில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் தோண்டி எடுக்கப்பட்டது.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய பல சந்தேக நபர்கள் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு மற்றும் கம்புறுபிட்டிய பொலிஸார் ஊடாக கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களிடம் இருந்து வெளிப்படுத்தப்பட்ட தகவல்களுக்கு அமைவாக இவ்வாறு அந்த முண்டப் பகுதி மீட்கப்பட்டுள்ளது.

அங்குனுகொலபெலஸ்ஸ பிரதான நீதிவான் குஷிகா குமாரசிரியின் முன்னிலையில் அம்பாந்தோட்டை சட்ட வைத்திய அதிகாரி சிசிர செனவிரத்னவின் வழி நடத்தலில் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் மற்றும் தடயவியல் பிரிவினரினால் இந்த உடல் பகுதி தோண்டி எடுக்கப்பட்டு மேலதிக பரிசோதனைகளுக்காக அம்பாந்தோட்டை வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் குறித்த உடல் பகுதி தொடர்பில் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளதுடன், அதன் பின்னர் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலுள்ள கொஸ் மல்லியின் தலை பகுதியில் இருந்து பெறப்பட்ட டி.என். ஏ. கூறுகளுடன் ஒப்பீடு செய்து, உடல் பகுதி தொடர்பில் உறுதியான அறிக்கை தயார் செய்யப்படவுள்ளதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வாழைத்தோட்டப் பகுதியில் கறுப்பு நிற பொலித்தீன் பையில் போடப்பட்டு கைவிடப்பட்டிருந்த நிலையில், கொஸ் மல்லி எனும் பாதாள உலக உறுப்பினரின் வெட்டி வேறாக்கப்பட்ட தலை என கடந்த 7 ஆம் திகதி பொலிஸாரால் இனங்காணப்பட்ட நிலையில் அவரது எஞ்சிய முண்டப் பகுதி அங்குனுகொலபெலஸ்ஸ பகுதியில் புதைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் விசாரணையாளர்கள் கடந்த சனியன்று கண்டறிந்தனர்.

இந்த நிலையில் அங்குனுகொலபெலஸ்ஸ - முரவெசிஹேன, கோத்தாபயகம பகுதியில் வாழை நட்டப்பட்டிருந்த விவசாய நிலத்துக்கு அருகில் உள்ள காட்டுப்பகுதிக்குள் அந்த உடல் பகுதி புதைக்கப்பட்டுள்ளதாக, கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் முன்னெடுக்கும் விசாரணைகளில் கைதாகியுள்ள சந்தேக நபர் ஒருவர் வாக்குமூலம் அளித்த நிலையில் அந்த இடத்தை அகழ்ந்து கொஸ்மல்லியின் தலையற்ற முண்டத்தை மீட்க பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

அதன்படி அந்த இடமானது, நேற்று தங்காலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் எல்.ஸ்ரீதாலின் ஆலோசனைக்கு அமைய பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டு விடே பாதுகாப்பு பணியில் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டனர்.

அன்றைய தினமே கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் பொலிஸ் அத்தியட்சர் நிசாந்த சொய்ஸாவின் மேற்பார்வையில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் சந்ரதிலக, பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் இன்ஸ்பெக்டர் நெவில் சில்வா தலைமையிலான சிறப்புக் குழு, அந்தப் பகுதிக்கு சென்று தங்காலை தடயவியல் பிரிவு பொலிஸாருடன் இணைந்து ஸ்தல விசாரணைகளையும் முன்னெடுத்தனர்.

அதன்படி அங்குனுகொலபெலஸ்ஸ நீதிவான் முன்னிலையில் கொஸ்மல்லியின் எஞ்சிய உடலை தோண்டி எடுக்க பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்த நிலையிலேயே நேற்றுமுன்தினம் தோண்டி எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் அரச அதிபராக தமிழரே வரவேண்டும்

## ஜனாதிபதிக்கு பொது அமைப்புக்கள் மனு

மன்னார், மார்ச் 21

மன்னார் மாவட்டத்துக்குத் தமிழர் ஒருவரை அரச அதிபராக நியமிக்குமாறு மன்னார் மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஜனாதிபதியிடம் கோரியுள்ளது.

இது தொடர்பாக அது ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

மன்னார் மாவட்டம் 99 வீதம் தமிழ் பேசும் மக்களைக் கொண்ட மாவட்டமாகும். கடந்த காலத்தில் இரண்டு சிங்கள அரசாங்க அதிபர்கள் ஏழு ஆண்டுகளாகப் பதவி வகித்துள்ளனர். தற்போது கடமையில் இருந்த அரசாங்க அதிபர் அமைச்சின் செயலாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். ஆகவே அடுத்து தமிழர் ஒருவரை அரசாங்க அதிபராக நியமிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். எமது மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே தகுதியானவர்களாக உள்ளனர். அவர்களை நியமிப்பது பொருத்தமானதாகும்.

ஆனால் நீங்கள் மீண்டும் சிங்கள இனத்தைச் சேர்ந்த ஒருவரையே அரசாங்க அதிபராக நியமிக்கவுள்ளனீர்கள் என்று அறிகின்றோம். இது எமது மன்னார் மக்களுக்குச் செய்யும் பெரும் துரோகம் ஆகும்.

கடந்தகாலத்தில் இருந்த சிங்கள அரசாங்க அதிபர் சாமானியமக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளாமல் சர்வாதிகாரியாகவே நிர்வாகம் நடத்தியிருந்தவர்அதனால் பலவிடயங்கள் தேக்கமடைந்தமையுடன் நிர்வாகச்சீர்கேடுகளும் ஒழுங்கின்மைகளும் தாண்டவமாடின. எந்த ஜனநாயகக் கருத்துக்கும் அவர் மதிப்பளிக்கவில்லை. அவ்வாறான ஒருவர் அரசாங்க அதிபராக மன்னாருக்குத் தேவையில்லை மக்களோடு மக்களாக மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளக்கூடிய நிர்வாகத்திறனுள்ள ஒருவரே எமக்கு வேண்டும் உங்கள் ஆட்சியை பேரளவில் நல்லாட்சி என கூறுவதில் அர்த்தமில்லை.

மக்களின் உணர்வுகளின் விருப்புக்கு விசுவாசமாக இருப்பதே நல்லிணக்கம் அடக்கி ஆள்வதற்குப் பெயர் நல்லிணக்கம் இலை. சிங்களமயமாக்கல் சிந்தனை யைத் தயவு செய்து நடைமுறைப் படுத்தாதீர்கள். ஆகவே மன்னார் மாவட்ட மக்களின் விருப்பிற்கு மாறாகச் செயற்படமாட்டீர்கள். எனநம்புகின்றோம். என்றுள்ளது.

ஐ

# ஜெனீவாத் தீர்மானம் சட்டவிரோதமானது

## சரத் வீரசேகர முறைப்பாடு

ஜெனீவா, மார்ச் 21

இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் சட்ட விரோதமானது என முன்னாள் கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் சரத் வீரசேகர முறைப்பாடு செய்துள்ளார்.

நேற்று முன் தினம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இது தொடர்பில் அவர் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தத் தீர்மானத்துக்கு இலங்கை அரசு இணை அனுசரணை வழங்கியிருந்தது.

எனினும், தீர்மானம் நிறைவேற்றுவதற்கு நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இணங்கவில்லை எனவும், அப்போதைய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவே இந்தத் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்க இணங்கினார் என்றும் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

ஜெனீவாத் தீர்மானத்திற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த முறைப்பாடு குறித்து விசாரணை நடத்தப்படும் எனக் கூறப்படுகிறது. (ஐ)

# ரணிலைக் கவிழ்ப்பதற்கு சு.கவுக்குள்ளும் எதிர்ப்பு

கொழும்பு, மார்ச் 21

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக மஹிந்த அணி கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிப்பது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இணக்கப்பாடு எட்டப்படவில்லை.

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

எனது தனிப்பட்ட கருத்தின் பிரகாரம் பிரதமருக்கு எதிரான பிரேரணைக்கு எதிர்ப்பை வெளியிடுகிறேன் என்று அவர் மேலும் கூறினார். ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

# ரணிலை அகற்றுவதற்கு கூட்டு எதிரணி தயார்!

## கூறுகிறார் காமினி லொக்குகே

ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமர் பதவியில் இருந்து அகற்றக் கூட்டு எதிர்க் கட்சி தயார் நிலையில் இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பத்தரமுல்லை தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் கூட்டு எதிரணி கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் தற்போது 51 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைச்சாத்திட்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் சுதந்திரக் கட்சிகளைச் சேர்ந்த மேலும் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதில் கைச்சாத்திட விருப்பம் தெரிவித்துள்ளார்கள். அந்த வகையில் நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் பிரதமர் பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்கவைப் பதவி விலக்க நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

அதன் பின்னர் பொருத்தமான ஒருவரைப் பிரதமராக நியமிப்பது ஜனாதிபதியின் முன்னுள்ள பொறுப்பாகும். ஏனெனில், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவுள்ள ஒருவரையே பிரதமராக நியமிக்கவேண்டும் – என்றார். (ஐ)










இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.03.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.